# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 14 ஜனவரி - 2001 இதழ் - 1



வெளியிடுவோர்

கிறிஸ்துவின் சபையார்,

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
தமிழ்நாடு, இந்தியா

© 04257 - 20030 e-mail : kangayamcofc@eth.net

# அருமையான வாய்ப்பு

பரிசுத்த ஆவியானவரின் பணி (170 பக்கங்கள்) மற்றும் புதிய ஏற்பாட்டு ஆராதனை(112 பக்கங்கள்) ஆகிய நூல்கள், தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு,உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும், வேத மாணவர்களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

புத்தகம் முற்றிலும் இலவசம். ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தங்கள் அனுப்பப் படும். அனுப்பவேண்டிய குறைந்தபட்ச தொகை ரூ.20/-

*தொடர்பு முகவரி:*

*தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்*

*தபால் பெட்டி எண் 27,*

***காங்கயம்*** - 638 701. இந்தியா

குறிப்பு: M.O. கூப்பனில் உங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும்

## ஆசானின் அறிவுரையிலே...


| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர் உரை | 01 |
| 2. | **பட்டமளிப்பு விழா அழைப்பிதழ்** | 08 |
| 3. | பரிசுத்த ஆவியின் அளவுகள் | 09 |
| 4. | பெண்கள் பகுதி | 12 |
| 5. | சாமுவேல் ஒரு கண்ணோட்டம் | 16 |
| 6.. | வாலிபர் பகுதி | 17 |
| 7. | உபத்திரவத்தின் ஆசீர்வாதம் | 20 |
| 8. | வேதாகமக் கேள்வி- பதில் | 21 |
| 9. | வெளிப்படுத்தின விசேஷம் | 23 |
| 10. | தெரிந்து கொள்ளுங்கள் | 26 |
| 11. | உண்மையுள்ள ஊழியக்காரன் | 29 |
| 12. | விளையாட்டுச் செய்திகள் | 31 |
| 13. | நடப்புச் செய்திகள் | 32 |

# THIRUMARAI AASAAN

**Published by Church of Christ**

Editor
*S. RAJANAYAGAM*

Honorary Editor
*J.C. CHOATE*

**Dharapuram Road, KANGAYAM - 638 701, Tamil Nadu, India**
**Pleading for the restoration of pure New Testament Christianity**

**Vol .14 January- 2001 Issue - 1**


*ஆசிரியவுரை*

# கர்த்தர் உன்னோடே இருக்கிறார்

சுமார் 350 ஆண்டுகளை உள்ளடக்கியுள்ள, நியாயாதிபதிகளின் காலத்தை, இஸ்ரவேல் சரித்திரத்தின் இருண்ட காலம் என்று நாம் சொன்னால், அது மிகையாகாது. ஏனெனில், மா மனிதனாகிய மோசேக்குப் பிறகு பொறுப்பேற்ற, தளபதி யோசுவாவின் தலைமையின் கீழ், பெரும்பாலான வெற்றிகளைக் கண்டு, சுற்றிலுமிருந்த மக்கள் மீது கோலோச்சிய இஸ்ரவேல், நியாயாதிபதிகளின் காலத்தில் சுற்றிலுமிருந்த ராஜாக்களாலே, மிகுந்த தொல்லைக்குள்ளாக்கப்பட்டு, அடிமைத்தனத்திற்குள்ளாகப் போக்கும் வரத்துமாயிருந்தார்கள். இக்கால கட்டத்தில், இஸ்ரவேல்,தேவனை விட்டுப் பிரிந்து போனதால், (2:13), தேவனும் இவர்களை விட்டுப்போனார்(2:23). சர்வ வல்லவரின் பாதுகாப்பு, இஸ்ரவேலை விட்டு விலக்கிக் கொள்ளப்பட்டதால், எதிரிகள் இவர்களை சுலபமாக மேற்கொண்டு, ஒருவர் மாற்றி ஒருவர், நையப் புடைத்தார்கள். அந்த ராஜாக்களின் கொடுமை தாங்க முடியாமல் இவர்கள் கதறுவார்கள், கூக்குரலிடுவார்கள், தேவனை நோக்கி முறையிடுவார்கள்.அப்பொழுது கண்ணீரைக் காணும், நம் நல்ல கர்த்தர், இவர்கள் மீது மனதுருகி, இவர்களை இரட்சிக்கும்படியாய் ஒரு இரட்சகனை எழுப்புவார். அந்த இரட்சகனின் கீழ் கொஞ்ச நாள் அமைதியாக இருப்பார்கள். பிறகு, மீண்டும் பாவம், அதனாலே மீண்டும் அடிமைத்தனம், அப்புறம் கூக்குரல்,அதன் பிறகு மீண்டும் நியாயாதிபதியின் கீழ் விடுதலை என்று காரியங்கள் இப்படியாக தொடர்ந்து நடந்து வந்தது.

இப்படி சுழற்சியாக காரியங்கள் நடந்த ஒரு கால கட்டத்தில், இஸ்ரவேல் புத்திரர், தங்கள் பொல்லாப்பினிமித்தம் மீதியானியரின் கையில் ஒப்புக்கொடுக்கப் பட்டார்கள். மீதியானியரின் கை இஸ்ரவேல் மீது பலத்துக்கொண்டது. ஆகவே, இஸ்ரவேல், தேவனுடைய ஜனங்கள் என்ற அந்தஸ்தோடு, தலை நிமிர்ந்து நடந்து,

சமாதானத்தோடு தங்கள் பட்டணங்களின் வீதிகளில் நடமாடுவதற்குப் பதிலாக, மிருகங்களைப்போல, மலைகளிலுள்ள கெபிகளிலும், குகைகளிலும் பதுங்கியிருந்து தங்களுடைய நாட்களைத் கழித்தார்கள் (நியாதி.6:2)இந்த மீதியானியரோ, தாங்கள் மட்டும் கொள்ளையிட்டால் போதாதென்று, அமலேக்கியரையும், கிழக்கத்தி புத்திரரையும் கூட்டுச் சேர்த்து வந்து, நிலத்தின் விளைச்சலைக் கெடுத்து, ஆடுமாடுகள், கழுதைகள் முதலானவைகளைச் சூறையாடிச் செல்வார்கள்(6:5). இப்படி எதிரிகளாலே, இஸ்ரவேல் மிகவும் சிறுமைப்பட்டது(6:6).

அப்பொழுது,ஜனங்கள், வழக்கம்போல தேவனை நோக்கி முறையிட்டார்கள். தம்முடைய பிள்ளைகளின் மனந்திரும்புதலுக்காக, ஆவலோடு காத்துக் கொண்டிருக்கும் நமது தேவன், ஒரு தீர்க்கதரிசியை அனுப்பி,''... என் சொல்லைக் கேளாதே போனீர்கள்'' என்று கடிந்துகொண்டார். (வச.6:9-10).மனிதர்களாகிய, நாம் அநேக சமயங்களில் பிறரின் தவறுகளையும், குறைகளையும் சுட்டிக்காட்டுவதோடு, நம்முடைய கடமை தீர்ந்ததென்று நினைக்கிறோமல்லவா, அப்படி நமது தேவன், இடித்துரைப்பதோடு அங்கே நிற்காமல், சீரழிந்து, சிறுமைப்பட்டு நிற்கும் தன் ஜனமாகிய இஸ்ரவேலை விடுவிக்கும்படியாய், ஒரு தகுதியான நபரைத் தன் தூதன் மூலம் தேடுகிறார்.

அப்பொழுது,ஒருமனிதன், தன்னுடைய நிலத்தின் விளைச்சலை மீதியானியரின் கைக்குத் தப்புவிக்கிறதற்காக, ஆலைக்குச் சமீபமாய் அதைப் போரடித்துக் கொண்டுள்ளான். (நியா.6:11) அப்பொழுது, கர்த்தருடைய தூதனானவர் அவனுக்குத் தரிசனமாகி; ''பராக்கிரமசாலியே, கர்த்தர் உன்னோடே இருக்கிறார்'' என்றார்.(6 :12) ஏலி, சாமுவேல் உட்பட மொத்தம் 15 நியாயாதிபதிகள் வேதாகமத்தில் இடம் பெற்றிருந்தாலும் நியாயாதிபதிகளுக்கான வேலையின் அடிப்படையில், நியாயாதிபதிகளாக இருந்தவர்கள் 13 பேரே. இந்தப் 13 பேரையும் தேவன், தன்னுடைய ஜனங்களை இரட்சிக்கும்படியாய், அந்தந்தக் காலகட்டங்களில் தெரிந்து கொண்டார். இருப்பினும், மற்ற பன்னிரெண்டு பேரையும் தெரிந்து கொண்ட போது, பயன்படுத்தப்படாத விசேஷ வார்த்தைகள், கிதியோன் நியாயாதிபதியாகத் தெரிந்து கொள்ளப்பட்டபோது பயன்படுத்தப்பட்டுள்ளது.ஆம், ***''பராக்கிரமசாலியே, கர்த்தர் உன்னோடே இருக்கிறார்''*** என்று தன்னுடைய தூதனைக் கொண்டு அறிவிக்கிறார்.

வானத்தையும்,பூமியையும், அதிலுள்ள எல்லாவற்றையும் வார்த்தையின் வல்லமையினால் உண்டாக்கின கர்த்தர், ஒருவனோடே இருக்கிறார் என்பது எவ்வளவு விசேஷமான காரியம். அதுவும், ஒரு குறிப்பிட்ட வேலையை, அதுவும் அவருடைய நாமத்துக்கடுத்த ஒரு காரியத்தைச் செய்யும்போது, கர்த்தர் நம்முடனே கூட இருக்கிறார் என்ற வாக்குத்தத்தம் கிடைப்பது எவ்வளவு சிறப்பான காரியம்.ஆகவேதான், '' கர்த்தர் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்'' என்று கேட்கிறார் பவுல் (ரோமர்.8:31) ஏன், கர்த்தருடைய தூதன், கிதியோனுக்கு அந்த வார்த்தைகளைச் சொன்னார் என்பது, நமக்கு முழுமையாகத் தெரியாது. ஆயினும், அச்சந்தர்ப்பத்தில் கிதியோனைப் பற்றிச்

சொல்லியிருக்கும் காரியங்களை வைத்து, அதற்கான காரணங்கள் இதுவாக இருக்கலாம் என்று சிலவற்றை நாம் கண்டுபிடிக்க முடியும். ஒருவேளை, நம்முடைய இம்முயற்சியில் வெற்றிகண்டு, அவனிடமிருந்த பண்புகளைக் கண்டுபிடித்து, அவைகளை நம்முடைய வாழ்க்கையிலும், பெற்றுக்கொள்வோமானால், ***கர்த்தர் நம்முடனே இருக்கிறார்*** என்ற நம்பிக்கையை நாமும் பெற்றுக்கொள்ளமுடியும். அந்த நம்பிக்கை, புதிய வருடத்தைத் தற்போதுதான் துவக்கியிருக்கும் நமக்குப் பெரிய பலமாக மாறும். அந்த பலம், இவ்வாண்டை நாம் மகிழ்ச்சியோடும், சமாதானத்தோடும் கழிக்கப் பெரிதும் உதவும்.

ஆகையால், இப்போது, தூதன், கிதியோனிடம் '' கர்த்தர் உன்னோடு இருக்கிறார்'' என்று சொன்னதற்கான காரணங்கள் எதுவாக இருக்கக்கூடும் என்று சிலவற்றைக் கண்டுபிடிக்க முயற்சிப்போம்.

## I. கிதியோனின் வேத அறிவு:

''கர்த்தர் உன்னோடே இருக்கிறார்'' என்று கர்த்தருடைய தூதன் சொன்னதற்கான முதல் காரணமாக நாம் காணக்கூடியது, கிதியோனின் வேத அறிவு.

ஆம், ''பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார்'' என்று அவனுக்குச் சொல்லப்பட்டபோது, அவன் கர்த்தருடைய தூதனிடத்தில் சொல்வதைப் பாருங்கள். ''ஆ, என் ஆண்டவனே, கர்த்தர் எங்களோடே இருந்தால், இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன்? கர்த்தர் எங்களை எகிப்திலிருந்து கொண்டுவரவில்லையா என்று எங்கள் பிதாக்கள் எங்களுக்கு விவரித்துச் சொன்ன அவருடைய அற்புதங்களெல்லாம் எங்கே? இப்பொழுது கர்த்தர் எங்களைக் கைவிட்டு, மீதியானியர் கையில் எங்களை ஒப்புக்கொடுத்தாரே என்றான்''(நியா.6:13) தேசத்தின் ஜனங்களெல்லாம் தேவனையும், அவருடைய மகத்துவங்களையும் மறந்தபடியால்தான், தேவன் அவர்களை அடிமைத்தனத்திற்கு ஒப்புக்கொடுத்தார். ஆனால், இந்த கிதியோனோ, ஏனைய எல்லோரைப்போலும் தேவனையும், அவருடைய மகத்துவங்களையும் மறந்துவிடாமல், அவைகளை தன்னுடைய மனதுக்குள்ளே வைத்து, சிந்தித்துக் கொண்டிருந்திருக்கிறான் .ஆகவேதான், கர்த்தருடைய தூதனிடத்தில் அவனால் உடனடியாக இவ்விதம் பேச முடிந்துள்ளது.

இப்படி, இவன் தேவ காரியங்களை அறிந்து வைத்திருந்தபடியால் தான், தேவன் மோசேயை அழைத்த சம்பவம் இவனுக்குத் தெரிந்திருந்தது.அங்கே, மோசே தேவனுடைய அழைப்பை ஏற்றுக் கொள்ளத் தயங்கினபோது, தேவன், அவன் கையிலிருந்த கோலைப் பாம்பாக மாற்றின சம்பவம் இவனுக்குத் தெரிந்திருந்தது. (யாத்.4:1-5) ஆகவே தான், இவனும் தன்னுடைய அழைப்பை உறுதி செய்து கொள்ள, தேவன் தன்னிடத்தில் விசேஷித்த முறையில் வெளிப்பட வேண்டுமென்று இரண்டு முறை கேட்டான்.(6:17,37,38). இப்படி அவன் கேட்டதற்கு காரணம், கண்டிப்பாக அவநம்பிக்கை அல்ல. மாறாக, தேவவசனங்கள் மீது அவன் கொண்டிருந்த நம்பிக்கையே இதற்கு அடிப்படை. ஒருவேளை, இந்தக் கிதியோன், தோமாவைப் போல் சந்தேகப்பட்டான் என்று கூட சிலர் சொல்லக்

கூடும்.நிச்சயமாக அது உண்மை அல்ல.அப்படி அவன் சந்தேக குணம் உடையவனாக இருந்திருந்தால், தேவன் அவனை, இந்த வேலைக்கு அழைத்திருக்கவேமாட்டார். அப்படித்தானே.

கிறிஸ்துவுக்குள் அருமையானவர்களே, கர்த்தர் கிதியோனோடே இருந்ததற்கான காரணங்களில் ஒன்று, அவன் தேவனுடைய மகத்துவங்களை அறிந்திருந்தது. அதாவது, அவன் தேவனுடைய வார்த்தைகளை முறையாக அறிந்திருந்தது. இது என்ன பெரிய காரியமா என்று கேட்கிறீர்களா? ஆம், இது பெரிய காரியம் தான், எப்படியெனில் நம்முடைய நாட்களில், கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்கிற, கிட்டத்தட்ட எல்லாருமே இக்காரியத்தில் தவறிழைத்துக் கொண்டுள்ளார்கள். தேவனுடைய வார்த்தைகளை அறிய வேண்டிய அளவுக்கு அறிவதில்லை. தெரிந்துகொள்ளவேண்டிய அளவுக்கு அவைகளை தெரிந்து கொள்வதில்லை. ஆகவே, மார்க்க ரீதியாக, ஒரு சீரழிந்த நிலை கிறிஸ்தவத்தை ஆட்டிப் படைத்துக்கொண்டுள்ளது. இப்படிச் சொல்கிறேன் என்று தவறாக நினைக்காதீர்கள். இது ஒரு கசப்பான உண்மை. வேதவாக்கியங்களை, ஒருவன் முறையாக, சரியாக அறியாவிட்டால், அவன் தப்பான செயலும், தவறான எண்ணமும் உடையவனாகவே இருப்பான். ஒரு சமயம் இயேசுவைச் சோதிக்கும்படியாக வந்த சதுசேய கூட்டத்தாரிடம், இயேசு இவ்விதம் சொன்னார். '' இயேசு அவர்களுக்கு பிரதியுத்தரமாக; ***நீங்கள் வேதவாக்கியங்களையும் தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணங்கொள்கிறீர்கள்''*** (மத்.22:29) என்று.

நமதாண்டவரின் கூற்று எவ்வளவு உண்மையாயிருக்கிறது பாருங்கள். இன்றைய கிறிஸ்தவத்தில், மலைபோல் குவிந்து கிடக்கிற பெரும்பாலான தவறுகளுக்கு காரணம், வேத வாக்கியங்களை முறையாக அறிந்து கொள்ளாததுதான்.அது குழந்தை ஞானஸ்நானமாக இருந்தாலும், முறையற்ற ஞாயிறு ஆராதனையாக இருந்தாலும், உருவ வழிபாடாக இருந்தாலும், அந்நியபாஷை குழப்பமாக இருந்தாலும், அற்புத அடையாள ஏமாற்றாக இருந்தாலும்,வரம் பெற்றவர்கள் என்று சொல்லி அலையும் வக்கிரமாக இருந்தாலும், இவை எல்லாவற்றுக்கும் காரணம், வேத வாக்கியங்களை முறையாக அறியாததுதான். ***''வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டு''*** (யோவான் 5:39). என்று தேவன் சொல்லும்போது, அதே தேவனுடைய பிள்ளை என்று சொல்லிக்கொள்ள விரும்பும் அநேகர், அதை ஆராயாவிட்டால் கூடப்பரவாயில்லை. குறைந்தபட்சம் அவைகளைப் படிக்கக்கூட ஆர்வம் காட்டாமல் இருப்பது எப்படி நியாயமாகும்? சொல்லுங்கள். அதைப் படிப்பவர்களுக்கும், எடுத்துப் போதிப்பவர்களுக்கும் கூலி கொடுத்தால் போதும் என்று, இன்றைய கிறிஸ்தவம் நினைப்பது எவ்வளவு வேதனையான காரியம். இதுதான் நிலை எனில், நமக்கு நித்திய ஜீவன் எப்படிக் கிடைக்கும்?

அன்பானவரே, வேதவாக்கியங்களை அறிந்துகொள்ள வேண்டிய அளவுக்கு அறிந்து வைத்திருந்தபடியால்தான், '' ***கர்த்தர் உன்னோடே இருக்கிறார்''*** என்ற வாக்குத்தத்தம் கிதியோனுக்கு கொடுக்கப்பட்டது. ஆகவே,

இந்தப்புதிய வருடத்தில்கிதியோனோடே இருந்த கர்த்தர் நம்முடனும் இருப்பதற்கு, நாம் ஒவ்வொருவரும் தேவனுடைய வார்த்தைகளை முழுமையாகத் தெரிந்து கொள்வோம்.

## II. கிதியோனின் பக்தி

''கர்த்தர் உன்னோடே இருக்கிறார்'' என்று கர்த்தருடைய தூதன் சொன்னதற்கான இரண்டாவது காரணமாக,கிதியோனுடைய பக்தியை நாம் கூறலாம்.

பக்தி என்பது ஒருவர் மீது நாம் காட்டும் சாதாரண அன்பை விட மேலானது. அது, ஒருபடி மேலானதா அல்லது பல மடங்கு அதிகமானதா என்பது அவரவரைப் பொருத்தது. ஆனால்,இங்கே, தேவன் மீது கிதியோன் கொண்டிருந்த பக்தி அசாதாரணமானது. பக்திக்காக, அவன் எதை வேண்டுமானாலும் செய்யவும், தன்னுடைய தேவபக்திக்காக யாருக்கு விரோதமாக வேண்டுமானாலும் செயல் படவும் ஆயத்தமாக இருந்துள்ளான்.

இங்கே வசனத்தை கவனியுங்கள்.'' அன்று ராத்திரியிலே கர்த்தர் அவனை நோக்கி; நீ உன் தகப்பனுக்கு இருக்கிற காளைகளில், ஏழு வயதான இரண்டாம் காளையைக் கொண்டு போய், உன் தகப்பனுக்கு இருக்கிற பாகாலின் பலிபீடத்தைத் தகர்த்து, அதின் அருகேயிருக்கிற தோப்பை வெட்டிப்போட்டு, இந்தக் கற்பாறை உச்சியிலே பாங்கான ஒரு இடத்தில், உன் தேவனாகிய கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி, அந்த இரண்டாம் காளையைக் கொண்டுவந்து, அதை நீ வெட்டிப்போட்ட தோப்பினுடைய கட்டை விறகுகளின் மேல் சர்வாங்க தகனமாகப் பலியிடக்கடவாய் என்றார்'' (நியா.6:25,26)

தேவன் அவனை, அவனுடைய தகப்பன் வீட்டாருக்கும், அவனுடைய ஊராருக்கும் எதிராகச் செயல்படும்படி சொல்கிறார். இப்படிச் செயல்படுவது ஒரு சாதாரண காரியமல்ல. எப்படியெனில், அந்நாட்களில், தேசம் முழுவதும் பாகாலுக்கு பணிவிடை செய்துகொண்டிருந்தது. பாகாலுக்கு விரோதமாகச் செயல்படுவது, பெருங்குற்றமாகக் கருதப்பட்டது. ஆனாலும் கூட, அவன் மாறுத்தரம் எதுவும் சொல்லாமல் உடனடியாக, ஒரு பத்துப் பேரைச் சேர்த்துக் கொண்டு தேவன் எதைச் செய்யச்சொன்னாரோ அதைக் கனகச்சிதமாகச் செய்து முடித்தான்.(6:27). தன் தகப்பன் வீட்டாருக்கும், தன் ஊராக்கும் பிரியமாயிருப்பது நல்லதா? அல்லது தேவனுக்கு உகந்தவனாக இருப்பது உசிதமானதா என்ற நிலை வந்தபோது, தேவனுடைய பட்சத்தில் நிற்பதைத் தெரிந்து கொண்டான். இது, ***''தகப்பனையும், தாயையும் என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல''*** என்று, நமதாண்டவரின் கூற்றை நமக்கு நினைவு படுத்துகிறது. (மத்.10:37)

அன்பானவர்களே, இந்த கிதியோனைப் போல, நம்மில் எத்தனை பேர் தேவனுக்காக, அவருடைய வார்த்தைகளுக்காக, கிறிஸ்துவுக்காக, அவருடைய சபைக்காகச் செயல்படுவதற்கு ஆயத்தமாக உள்ளோம்? தேவனுடைய வார்த்தை அவனுக்கு அறிவிக்கப்பட்டவுடன் அவன் எதையுமே யோசிக்கவில்லை.

அந்த வார்த்தையை நிறைவேற்ற வேண்டுமென்பதே அவனுக்குப் பிரதானமாக இருந்தது. அவன் தேவன் மீது வைத்த பக்தி எப்படிப்பட்டதென்று பாருங்கள். ***''என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து, அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது''*** (யோவான் 4:34)என்று நமதாண்டவர் சொன்னதுபோல் தன்னைத் தெரிந்துகொண்டவரின் கட்டளையை நிறைவேற்றுவதே கிதியோனுக்கும் போஜனமாயிருந்துள்ளது.

இதை வாசித்துக்கொண்டிருக்கும் நண்பரே, நம்முடைய பக்தியின் நிலை எப்படியுள்ளது? அது மெய்பக்தியா? அல்லது பொய் பக்தியா? சொல்லுங்கள். உபதேச விஷயத்தில் அதாவது, ஒருவன் கிறிஸ்தவனாக எப்படி மாறுவதென்பது குறித்தும், எப்படி வாழவேண்டும்மென்பது குறித்தும் தேவனுடைய வார்த்தைகள் தெளிவாக இருந்தும், அதை ஏற்றுக் கொள்ளத் தயங்குகிறோமே அது எப்படி மெய்பக்தியாகும்? கிதியோன் தேவனுடைய வார்த்தையை ஏற்றுக்கொள்ளத் தயங்கினானா? நம்முடைய குடும்பத்தாரைக் குறித்தும், சமுதாயத்தைக் குறித்தும் அநேக சமயங்களில் கலங்குகிறோமே, அது போல் அவன் கலங்கினானா? இல்லை. இல்லவேஇல்லை. ''கர்த்தாவே சொல்லும் அடியேன் கேட்கிறேன் என்று பிள்ளையாண்டான் சாமுவேல் சொன்னதைப்போல் தான் அவனுடைய மனநிலையும் இருந்தது. கிறிஸ்துவைப் பின்பற்ற விரும்பும் ஒவ்வொருவனுக்கும் அப்படிப்பட்ட மனநிலை இருப்பது அவசியம். இந்தப் புதிய ஆண்டில், கிதியோனோடே இருந்த கர்த்தர், நம்மிடத்திலும் இருந்து வழிநடத்த வேண்டுமானால், கிதியோனுக்கிருந்த பக்தியைப் போன்ற பக்தி நமக்கும் இருப்பது அவசியம்.

## III. கிதியோனின் கீழ்ப்படிதல்

***''கர்த்தர் உன்னோடே இருக்கிறார்''*** என்று கர்த்தருடைய தூதன் சொன்னதற்கான, இன்னொரு காரணமாக, நாம் கிதியோனுடைய கீழ்ப்படிதலைக் கூறமுடியும்.

தேவனுடைய பிள்ளைகளுக்கு இருக்கவேண்டிய முக்கியமான குணங்களில் முதன்மையானது கீழ்ப்படிதல். தேவனைப் பின்பற்ற விரும்பும் ஒவ்வொரு வருக்கும் இக்குணம் இருப்பது அவசியம் என்பதை வேதம் சாமுவேல் புத்தகத்தில் எவ்வளவு தெளிவாகக் கூறுகிறதென்று பாருங்கள். ***''அதற்கு சாமுவேல்; கர்த்தருடைய சத்தத்திற்கு கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும். பலிகளும் கர்த்தருக்கு பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவிகொடுத் தலும் உத்தமம்''*** (1.சாமு.15:22). இன்னும், ஞானி சாலமோன், கீழ்ப்படிதல் அவசியம் என்பதை இவ்விதம் கூறுகிறார். ***''வேதத்தைக் கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபம் அருவருப்பானது''*** (நீதி.28:9) என்கிறார். நம்முடைய கிதியோனிடத்தில், வேதத்தைக் கேட்பதும் அதற்குச் செவிகொடுப்பதும், அதற்குக் கீழ்ப்படிவதும் பிரதான காரியமாக இருந்துள்ளது.

ஆம், தேவன் இவனை அழைத்தபோது, கர்த்தர் எங்களோடே இருந்தால், இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன் என்றும், எங்கள் பிதாக்கள்

விவரித்துச்சொன்ன அற்புதங்களெல்லாம் எங்கே என்றும் கேள்வி கேட்டான். இவன் தேவனிடத்தில், கேட்ட கேள்விகளுக்கு அங்கே, நேரிடையாக பதில் கிடைக்கவில்லை. மாறாக ***''உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ''*** என்று மத்திரம் சொல்லப்பட்டது. ஆயினும், கர்த்தரின் காரியமாகப் போவதற்கு அவன் தன்னை முற்றிலும் ஆயத்தமாக்கிக் கொண்டான். நாமாக இருந்தால் என்ன செய்திருப் போம்? நம்முடைய கேள்விகளுக்கு தேவன் பாரா முகமாக இருக்கிறார். முதலில்,நான் கேட்பதை அவர் எனக்குச் செய்யட்டும். பிறகு நான் அவருக்குக் கீழ்ப்படிவதைக் குறித்து யோசிக்கிறேன் என்று சொல்லியிருப்போம். ஆனால், இந்த கிதியோன், தேவசத்தத்திற்கும், தேவனுடைய சித்தத்திற்கும் தன்னை ஒப்புக் கொடுத்தான். அப்பொழுது, பரலோகத்தின் தேவன் இவனைத் தனக்காக பயன்படுத்தினார். தேவனுக்காக வல்லமையான காரியங்களை இவன் செய்தான்.

அருமையானவர்களே, தேவனுக்குக் கீழ்ப்படிவதில் நாம் எப்படி? நமதாண்டவரைக் குறித்து எபிரேய ஆசிரியர் ***''அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே, கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார்...''*** என்று கூறுகிறார் (எபி.5:8) அங்கே நாம் கவனித்தால், தேவ குமாரனே கீழ்ப்படிந்தார். தேவ குமாரனுக்கே கீழ்ப்படிதல் அவசியமாயிருந்தது.அப்படியானால், நமக்கு? அதைச் சொல்லவே தேவையில்லை. தமக்குக் கீழ்ப்படிந்தவர்களைத் தான் தேவன் அங்கீகரித்துள்ளார். இன்னும் தமக்குக் கீழ்ப்படிந்தவர்களைத்தான் தேவன் அந்தந்தக்காலகட்டங்களில் தமக்காகப் பயன்படுத்தியுள்ளார். எபிரேயர் 11-ம் அதிகாரத்திலுள்ள, விசுவாசிகளின் பட்டியலில் இடம்பெற்றுள்ள விசுவாச வீரர்களெல்லாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்தவர்களே.

அதுமாத்திரமல்ல, புதிய ஏற்பாட்டின் கீழ் வாழ்கிற நாம், நம்முடைய இரட்சிப்பை நிறைவேற்றிக்கொள்வதற்கும் கீழ்ப்படிதல் மிகவும் அவசியம். அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பி பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு எழுதும் போது, இது குறித்து எவ்வளவு அழகாக எடுத்துரைக்கிறார் பாருங்கள். ***''ஆதலால், எனக்குப் பிரியமானவர்களே, நீங்கள் எப்பொழுதும் கீழ்ப்படிகிறபடியே, நான் உங்களுக்குச் சமீபமாயிருக்கும்போது மாத்திரமல்ல, நான் தூரமாயிருக்கிற இப்பொழுதும், அதிக பயத்தோடும், நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்''*** (பிலி.2:12).

அன்பானவர்களே, இன்றைக்கு நம்மில் எத்தனைபேர், நம்முடைய இரட்சிப்பு நிறைவேற பயத்தோடும், நடுக்கத்தோடும் தேவனுக்கும், அவர் தந்த பரிசுத்த வார்த்தைகளுக்கும் கீழ்ப்படிகிற பிள்ளைகளாகயிருக்கிறோம்? தயவுசெய்து நெஞ்சிலே கையை வைத்துச் சொல்லுங்கள் பார்க்கலாம்? இன்றைய கிறிஸ்தவத்தின் பயமும்,பக்தியும் கீழ்ப்படிதலும் எந்தளவு உள்ளது? கீழ்ப்படிதல் இருக்கவேண்டிய கிறிஸ்தவத்தில், கேளிக்கைகள் மிகுந்து காணப்படுகிறதே அது எப்படி? அமைதி இருக்க வேண்டிய கிறிஸ்தவத்தில் ஆட்டமும், ஆர்ப்பாட்டமும் காணப்படுகிறதே, அது ஏன்? சொல்லுங்கள்.பயமும், பக்தியும் இல்லாததே, இந்த இழிநிலைக்கு காரணம், யாராவது, இந்த உண்மையை மறுக்கமுடியுமா? நாம் ஒவ்வொருவருக்கும் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்றே அவர் எதிர்பார்க்கிறார்.

ஆகவே, அருமையான தேவனுடைய பிள்ளைகளே, கர்த்தர், ஒரு புத்தாயிரமாவது ஆண்டைக் காணச்செய்திருக்கிற இச்சந்தர்ப்பத்தில், இப்பொழுது நாம் பார்த்த இந்த கிதியோனைப்போல, தேவனுடைய வார்த்தைகள் மற்றும் மகத்துவங்களைப்பற்றிய ஆழ்ந்த அறிவு உள்ளவர்களாகவும், கிறிஸ்துவைப் பற்றியும், அவருடைய உபதேசங்கள் பற்றியும் தெளிவுள்ளவர்களாகவும் கிதியோனைப் போல தேவனுக்காக எல்லாவற்றையும் செய்கின்ற அளவுக்கு அவர்மீது பக்தியுள்ள வர்களாகவும், கிதியோனைப்போல, தேவனுக்கு முற்றிலும் கீழ்ப்படிகிறவர்களாக வும் இருப்போமாக! அப்படி நாம் இருந்தால், கிதியோனோடே இருந்த கர்த்தர், நம்மோடும் கூட இருந்து, இந்த வருடம் முழுவதும் மாத்திரமல்ல, நம் வாழ்நாள் முழுவதும் நம்மைக் காத்துக்கொள்வார். ஆமென்.

செ. ராஜநாயகம்

ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!!

## உலக வீடியோ வேதாகமக் கல்லூரியின்

## மூன்றாவது பட்டமளிப்பு விழா அழைப்பிதழ்

நேரம் : காலை 9 :30 மணி

நாள் : 23-2-2001 வெள்ளிக்கிழமை



இடம் : கிறிஸ்துவின் சபை வளாகம்

தாராபுரம் ரோடு, காங்கேயம் - 638 701.

***சிறப்புச் செய்தி***

**சகோ. சார்லஸ் டீ பால்மா U.S.A.**

***Bro. CHARLES DI PALMA***

நற்செய்திக் கூட்டங்கள்

நேரம் : மாலை 6:30 மணி

நாள் : பிப்ரவரி 24,25 - 2001- சனி, ஞாயிறு

*பெண்கள் சிறப்பு வகுப்பு*

சகோதரி. மேரி டீ பால்மா U.S.A

தொடர்பு முகவரி : கிறிஸ்துவின் சபை, த.பெ.எண்.27, காங்கேயம்.

போன்:04257- 20030, e- mail : kangayam cofc @ eth.net

# பரிசுத்த ஆவியின் அளவுகள்

அற்புதங்கள் இன்னும் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக அநேகர் நம்புகின்றனர். முதல் நூற்றாண்டில் அப்போஸ்தலருக்கு கொடுக்கப்பட்டது போலவே இன்றும் தேவனுடைய பிள்ளைகளுக்கு பரிசுத்தாவியின் ஞானஸ்நானம் கொடுக்கப்படுவதாக போதிப்பவர்கள் இவர்களே, இப்படிப்பட்ட அனைத்துக் குழப்பங்களுக்கும் பரிசுத்த ஆவியின் அளவுகளைக் குறித்த அறியாமையே அடிப்படைக் காரணமாகும்.

(1) கிறிஸ்து அளவற்ற ஆவியைப் பெற்றார் ''தேவனால் அனுப்பப்பட்டவர் தேவனுடைய வார்த்தைகளைப் பேசுகிறார்; தேவன் அவருக்குத் தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார்''. (யோவான் 3:34). இதன் விளைவாக, எல்லாவற்றையும் செய்ய கிறிஸ்து வல்லமை பெற்றிருந்தார். அவர் முடவர்களை சுகமாக்கினார். குருடர்களுக்கு பார்வையளித்தார்.ஊமையர்களை பேசச் செய்தார். செவிடர்களை கேட்கச் செய்தார். திரளானவர்களைப் போஷித்தார், தண்ணீரின் மேல் நடந்தார், கொந்தளித்த கடலை அமர்த்தினார், மரித்தோரை உயிரோடெழுப்பினார். இவைகளை எல்லாம் எதற்காகச் செய்தார்? வசனத்தை உறுதிப்படுத்தவும் அதினால் விசுவாசிகளை உண்டாக்கவுமே அப்படிச் செய்தார்.(யோவான் 20:30,31)

(2) பரிசுத்தாவியின் ஞானஸ்நானம், புதிய ஏற்பாடு முழுவதிலும் இரண்டு இடங்களில் மட்டுமே இச்சம்பவம் நிகழ்ந்தது.முதலாவதாக, அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள் (அப்:2). அவர்களுக்கு கிறிஸ்து முன்கூட்டியே அவர்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்தும்படி தேற்றரவாளனை அவர்களுக்கு அனுப்புவதாக வாக்களித்திருந்தார்(யோவான் 16:13). கிறிஸ்து அவர்களை விட்டு பிரிந்து போக வேண்டியதாயிருந்தமையாலும், அப்போஸ்தலர்களுக்கு இன்னமும் வழிநடத்துதல் தேவை என உணர்ந்தமையாலும், அவர்களுக்கு பரிசுத்தாவியை அனுப்புவதாக வாக்கு அருளினார்.அவர்கள் பரிசுத்தாவியின் ஞானஸ்நானம் பெற்றபின், அவர்கள் வேறு மொழிகளில் பேசும் வல்லமையைப் பெற்றனர். முடவர்களை குணமாக்கவும், வியாதியஸ்தர்களை சுகமாக்கவும், மரித்தோரை உயிரோடெழுப்பவும், அற்புதங்களை மற்ற விசுவாசிகளும் செய்யத்தக்கதான பெலனைப் பெறும்படிக்கு அவர்கள் மீது கைகளை வைத்து வரங்களைக் கொடுக்கவும் அதிகாரம் பெற்றனர்.

இரண்டாவதாக கொர்நெலியுவும்,அவருடைய வீட்டாரும் பரிசுத்தாவியின் ஞானஸ்நானத்தைப் பெறவும்,அதின் மூலம் புறஜாதியாரும் யூதர்களைப்போலவே தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டனர் எனக் காண்பிக்கவும் அவர்களுக்கு கொடுக்கப் பட்டது...(அப் 10,11) அவர்கள் அதைப் பெற்றபின், அந்நிய பாஷையில்பேசி நிரூபித்தனர். பேதுரு அவர்களை குறித்து பேசி,''நம்மைப் போலபரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா என்று சொல்லி'' (அப்.10:47) ஞானஸ்நானம் கொடுக்க கட்டளை யிட்டான். இதைத் தொடர்புபடுத்தி பேசுகையில்,''நான் பேசத் தொடங்கினபோது,

பரிசுத்த ஆவியானவர் ஆதியிலே நம்மேல் இறங்கினது போலவே, அவர்கள் மேலும் இறங்கினார்''. (அப்.11:15) மற்ற எல்லா விசுவாசிகளும் பெற்றுக்கொண்டதுபோல கொர்நெலியுவும் வீட்டாரும் பரிசுத் தாவியைப் பெற்றுக் கொண்டதாக கூறவில்லை என்பதை கவனிக்க வேண்டும். மாறாக அவருடைய வீட்டார் அனைவரும் அப்போஸ்தலர்களாகிய (''நம்மைப்போல'') அவர்களைப் போல பெற்றதாகவே குறிப்பிடுகிறார். அப்போஸ்தலர்கள் ஆதியிலே பெற்றதைப் போலவே இவர்களும் பெற்றதைக் குறிப்பிடுகிறார். அப்போஸ்தலருக்கு பரிசுத்தாவியின் ஞானஸ்நானம் குறித்த வாக்குறுதி கொடுக்க ப்பட்டு, சகல சத்தியத்திற்குள்ளும் அவர்கள் வழிநடத்தப்படவும், வசனத்தை உறுதிப்படுத்தவும், புதிய ஏற்பாட்டை எழுதி பூர்த்தியாக்கவும் தக்க வகையில், கர்த்தரே மேற்படி (பரிசுத்தாவியின்)ஞானஸ்நானத்தை அருளினார். மேலும், கொர்நெலியுவும் அவருடைய வீட்டாரும் தண்ணீர் ஞானஸ்நானத்திற்கு முன்பாக பரிசுத்தாவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றார்கள்.

பிறகு கைகளை வைக்குதலினால் பரிசுத்த ஆவியைக் கொடுத்தல் என்பது அப்போஸ்தலர்களால் மாத்திரம் நடப்பிக்கப்பட்டது. அப்போஸ்தலர்கள் மரித்தபோதும், கைகளை வைக்குதலினால் பரிசுத்தாவியின் வரங்களைப் பெற்றவர்கள் மரித்தபோதும்,அற்புதவரங்கள் அனைத்தும் நின்று போயின. அதிலிருந்து மனிதர்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்த ஏதுவாக எழுத்து வடிவத்தில் புதிய ஏற்பாடு பூர்த்தியாகி கொடுக்கப்பட்டமையால் அற்புத வரங்களுக்கு இனியும் தேவையிருக்கவில்லை. (1.கொரி.12:8-10;யாக்.1:25; 2தீமோ.3:16,17)

இன்றும் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெறுகிறோம் என்றும், அற்புதங்களைச் செய்யும் வல்லமை தங்களுக்கு உண்டு என்றும் சொல்லும் கூட்டத்தாரைப்பற்றி என்ன? அவர்கள் வஞ்சிக்கப்பட்டு; தவறாக வழிநடத்தப்பட்டு, தேவதூஷணம் கூறக் கூடியவர்களாயிருக்கின்றனர். அவர்கள் தேவனுடைய சித்தத்தைக் கூட செய்வதில்லை, இப்படியிருக்கும் பட்சத்தில் அவர்களை பரிசுத்த ஆவியானவர் எப்படி நடத்தக்கூடும்? வேதம் குறிப்பிடாத மனிதப் பெயர்களைத் தங்களுக்கு தரித்துக் கொண்டிருக்கிற சபைகளிலே ஆவியானவர் அவர்களை நடத்தக் கூடுமா? நிச்சயமாக இல்லை. அவர்கள் தங்களுக்கு இருப்பதாகச் சொல்லும் வல்லமை இருப்பது உண்மையாயின், இயேசுவும் அப்போஸ்தலர்களும் செய்யும் அனைத்து அற்புதங்களையும் அவர்கள் செய்ய வேண்டும்.

(3) கைகளை வைக்குதலினால் கொடுக்கப்பட்ட பரிசுத்த ஆவியின் அளவு; அப்போஸ்தலர்கள் எண்ணிக்கையில் மிகச் சிலராக இருந்தமையாலும், அநேகக் காரியங்களை செயல்படுத்த வேண்டியிருந்ததாலும், வித்தியாசப்பட்ட அநேகரு டைய தலையின் மேல் கைகளை வைத்து பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்ளும்படி செய்தனர்.முதலாவதாக அப்போஸ்தலர் ஏழுபேர் மேல் கைகளை வைத்தனர். (அப்.6:6). இக்காரியம் பிலிப்பு போன்ற மனுஷர்கள் சமாரியாவுக்குப்போய் அற்புதங்களை செய்யும் வல்லமையைக் கொடுத்தது .அதன் விளைவாக, சுவிசேஷத்திற்கு அநேகர் கீழ்ப்படிந்தனர். ஆகிலும், பிலிப்புஇவர்களில் யாருக்கும்

வல்லமைகளைக் (வரங்களைக்) கொடுக்க இயலவில்லை. பின்னர் அப்போஸ்தலராகிய பேதுருவும், யோவானும் எருசலேமிலிருந்து வரவழைக்கப்பட்டு, அவர்கள் ஜனங்களின் மீது கைகளை வைத்து அற்புத வரங்களை அளித்தனர். (அப்.8:14-17).

(4) பரிசுத்த ஆவியின் சாதாரண அளவு: பரிசுத்த ஆவியின் ஞானஸ்நான அளவும், கைகளை வைக்குதலினால் கொடுக்கப்பட்ட அளவுகளுக்கப்பால், மற்ற அனைவரும் பரிசுத்த ஆவியின் சாதாரண அளவிலேயே பெற்றனர். இது பரிசுத்த ஆவியினைப் பெறுகின்றனர் என்ற உறுதியைத் தவிர வேறு அற்புதங்களைச் செய்யத்தக்கதாக அளவைக் (பெலனை) கொடுப்பதில்லை. பேதுரு பெந்தகொஸ்தே நாளிலே, ''நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக் கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்'', என்று கூறினார். (அப்.2:38)

பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் அப்போஸ்தலர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டு, அவர்களை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தவும்,வசனத்தை உறுதிப்படுத்தவும், புதிய ஏற்பாட்டை எழுதுவதற்காகவும் அவர்களை வழிநடத்தவும், கர்த்தரால் அருளப்பட்டது. மேலும் கொர்நெலியு வீட்டாரின் விஷயத்தில், தண்ணீர் ஞானஸ்நானத்திற்கு முன்பாக கொடுக்கப்பட்டது.

பிறகு அப்போஸ்தலர்களின் கைகளை வைத்து கொடுக்கப்பட்ட பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் அப்போஸ்தலர்களால் நடப்பிக்கப்பட்டது. எனவே அப்போஸ்தலர்கள் யார்மீது கைகளை வைத்து பரிசுத்த ஆவியைக் கொடுத்தார் களோ அவர்களுடன் அற்புதங்களைச் செய்யும் ஆவியின் வரம் முற்றிலும் நின்று போயிற்று. அதே வேளையில் புதிய ஏற்பாடு எழுதி பூர்த்தியாக்கப்பட்டு, மனிதர்களை சகல சத்தியத்திற்குள்ளும் நடத்தவதற் கேதுவாக்கியது (யாக்.1:25, 2தீமோ.3:16,17).

ஆனால் இன்று பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்று வல்லமையை பெற்றுள்ளோம் என்று கூறுவோரைப்பற்றி என்ன? அவர்கள் வஞ்சிக்கப்பட்டு, தவறாக வழி நடத்தப்பட்டு தேவதூஷணத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். அவர்கள் தேவனுடைய சித்தத்தையே முறையாகச் செய்யாதபோது, அவர்களை ஆவியானவர் எப்படி வழி நடத்தக்கூடும்? வேதம் கூறாத சபைகளிலும், மனிதப் பெயர்களை கொண்டதுமான கூட்டங்களிலே ஆவியானவர் அவர்களை நடத்தக்கூடுமோ? நிச்சயமாக இல்லை. அவர்கள் அப்படி வல்லமையை பெற்றிருப்பது உண்மையெனில், இயேசுவும் அப்போஸ்தலரும் செய்த எல்லாவற்றையும் அவர்களும் இன்று நடப்பிக்க வேண்டுமே. ஆனால் அவர்களோ தாங்கள் என்னவெல்லாம் செய்யும் வல்லமை பெற்றுள்ளார்கள் என்பதை வெறும் வாய்ப்பேச்சிலே பெருமையாக பேசித் திரிவார்களேயன்றி ஒன்றையும் செய்யமாட்டார்கள். என் நண்பரே, அவர்களுடைய கள்ள உபதேசங்களினால் மோசம் போகாதீர், மாறாக உங்களை வழிநடத்தும் வேதத்திற்கே திரும்புங்கள்.

**J.C.Choate** J.C. சோட்

(பெண்கள் பகுதி)

# ஆண்கள் தலைமைக்கும், பெண்கள் அவர்கள் துணைக்கும்

ஒரு ஆண்பிள்ளைக்கு, அவனுடைய இளம்பருவத்திற்கான காரியங்கள் மற்றும் பண விஷயங்களில் அவன் கவனமாக இருக்க வேண்டியதன் அவசியம் பற்றி போதிப்பதைக் காட்டிலும், அவன் வளரும்போதே, தேவ மனிதனுக்கேற்ற பண்புகளைப் பெற்றுக்கொள்ளும்படி போதிப்பது முக்கியமானது.

அதாவது, தன்னுடைய குடும்பத்திற்கு, அவன் அன்பான ஒரு தலைவனாக இருப்பது பற்றி, தன்னுடைய மனைவிக்கும், பிள்ளைகளுக்குமிடையே, பொறுப்புள்ளவனாக நிற்க வேண்டியது பற்றி, குடும்பத்திற்கும், உலகத்திற்கும் இடையே நிற்கவேண்டியதுபற்றி, குடும்பத்திற்கு ஆவிக்குரிய தலைவனாக இருப்பதுபற்றி, குடும்பம் எடுக்கும் முடிவுகளுக்கு தேவனுக்கு பதிலளிக்க வேண்டிய அவசியம் பற்றியெல்லாம் போதிக்கவேண்டும்.

ஆண்களோடு போட்டியிடும் வண்ணம், இன்றைய பெண் பிள்ளைகளின் பொதுவான வளர்ப்பும், பயிற்சியும் அமைந்திருக்கிறது. இப்படிப்பட்ட அமைப்பினால், பெண்கள் தங்கள் வாழ்க்கை துணைவருடன் பிரச்சினையை சந்திக்க நேரிடுகிறது. திருமண உறவுக்குள் தன்னை உட்படுத்தும் வேளைக்காக ஆயத்தப்படுத்தவும், தன்னை தெரிந்துகொண்ட (அல்லது தான் தெரிந்து கொண்ட) கணவரின் வாழ்க்கை முழுமையாகச் செய்யவும், தன் குடும்பத்தின் மேல் அன்புள்ளவளாக, கரிசனையுள்ளவளாக இருக்கவும், தேவன் தன் கணவனை தன்னுடைய நலனுக்காகவே உண்டாக்கியிருக்கிறார் என்பதை புரிந்து கொள்ள வேண்டும் என்று ஒரு பெண்ணிடம் தேவன் எதிர்ப்பார்க்கிறார். நிச்சயமாகவே, தன் கணவனுக்கு சிறந்த துணையாக அமையவும், தன் பிள்ளைகளை சிறப்பாக வளர்க்கவும் அவள் தன் மனதை தரமான கல்வி அறிவுடன் வளர்க்க வேண்டும்.

ஆனால், துரதிஷ்டவசமாக, எளிமையான இல்லத்தரசியாகவும், தாயாகவும், மனைவியாகவும் இருப்பதில்ஆர்வமின்மையால், பெண்கள் இக்காரியத்தைக் குறித்து பெரிதாக கவலைப்படுகிறார்கள். இது ஒரு சோகமான, ஆர்வம் காட்ட முடியாத வேலை என்ற கருத்து நிலவுவதினால் அநேகத் தாய்மார்கள் தங்கள் பிள்ளை வளர்ப்பிலிருந்து தப்பித்துக் கொண்டு அலுவலகங்களில் வேலை பார்க்கும் உற்சாகத்தை அடைய கொஞ்சமும் தாமதிப்பதில்லை. இப்படிப்பட்ட மனோபாவங்கள் அதிகமாய் கற்றுக்கொடுக்கப்பட்டவை - நமது கலாச்சாரம், ஒன்றுக்கும் உதாவாதவர்களும், அடக்கப்பட்டவர்களும் தான் வீட்டிலிருப்பார்கள் என்றும், தாலந்துள்ளவர்கள், உலகத்தில் போட்டிப்போட்டுக்கொண்டு, தங்களுக்கென்று நல்லதொரு எதிர்காலத்தை உண்டாக்கி, அதிகமாய் சம்பாதிப்பார்கள் என்றும் மீண்டும் மீண்டும் சொல்லிக்கொடுக்கிறது.

கடந்த தலைமுறையில் தாய்மைத்துவம் என்பது பெருமையாகப் பேசப்பட்ட ஒன்றாக இருந்தது. பெண்கள் தங்கள் பிள்ளைகளில் மகிமையடைந்தார்கள். தங்கள் கணவனிமித்தம் புகழ்ச்சி அடைந்தார்கள்.தங்கள் திறமைகளை குடும்பத்திற்காக பயன்படுத்துவதை கௌரவமாக எண்ணினார்கள். அவர்களெல்லாம், நசுக்கப்பட்டவர்களோ அல்லது வெறுப்படைந்தவர்களோ, கல்லாதவர்களோ, வாழ்க்கையைப் பற்றி ஒன்றும் தெரியாதவர்களோ அல்ல. தங்களைப்பற்றியும், தாங்கள் என்ன செய்கிறார்களோ அதிலேயும் மகிழ்ச்சியாயிருந்தார்கள். ஏனென்றால் அவர்கள் தேவனுடைய சித்தத்தைப்பற்றி கற்பிக்கப்பட்டிருந்தார்கள்.

## *அவர்கள் என்ன கேட்கிறார்கள், அல்லது எதைப் பார்க்கிறார்கள்?*

நாம் எப்படி சிறப்பாகக் கற்றுக்கொள்ளமுடியும்? நம் குழந்தைகள் எப்படி சிறப்பாக கற்றுக்கொள்ளமுடியும்?

வாயின் வார்த்தைகளினால்:- அன்றாடம், பெற்றோராகிய நாம் நம் பிள்ளைகள் வெற்றியுள்ள வாலிபர்களாக வருவதற்கு நம் வாயின் வார்த்தைகள் அவர்கள் கற்றுக்கொள்ளும்படியாக இருக்கவேண்டும்.

வாழ்க்கையினால்:- நாம் வார்த்தைகளை தொடர்ந்து பேசாமல் இப்பொன்றும் பிறகொன்றுமாக பேசுகிறோம். ஆனால், நாம் ஒரு நாளின் இருபத்து நான்கு மணிநேரமும் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். தானாகவே,நம் பிள்ளைகள் நம்மிடமிருந்து எதைக் கேட்கிறார்களோ அதைவிட நம்மிடமிருந்துஎதைப் பார்க்கிறார்களோ அதையே பலமடங்கு அதிகமாக கற்றுக்கொள்ளமுடியும்.

குறிப்பாக, இதுதான் உண்மையான மனோநிலை. ஒரு பெண் ஓயாமல் தன் கணவனுடன் வாக்குவாதம் செய்துகொண்டு, அவனுடைய தலைமைத்துவத்தை சவால் விட்டுக்கொண்டு இருக்கும் போது, தன்னுடைய பெண்பிள்ளைகள் அவர்கள் கணவன்மார்களுக்கு கீழ்ப்படிந்து அவர்களை மதிக்கச்சொல்லி கற்றுக்கொடுக்கும்போது அவள் முழுவெற்றியையும் அடைந்துவிட முடியாது. அதைப்போலவே, தன் மனைவியை அற்பமாய் எண்ணுகிற ஒரு கணவன் அல்லது திடசித்தமில்லாமல் பெண்களால் ஆளப்படும் ஒரு கணவன் தன் ஆண் மக்கள் அவர்களுடைய மனைவிகளில், கிறிஸ்து சபையில் அன்பு கூர்வதுபோல அன்பு கூறவேண்டுமென்று கற்றுத்தரமுடியாது. அத்தோடு தன் மகன்களை ஒரு பொறுப்புள்ள, தலைமையேற்று நடத்தக்கூடிய பண்புள்ளவர்களாக உருவாக்க முடியாது. சந்தேகத்திற்கிடமின்றி, நம்முடைய பிள்ளைகள் அவர்களுடைய வாழ்க்கையைபற்றியதான அணுகுமுறைகளை நம்மைப் பார்த்துதான் கற்றுக் கொள்கிறார்கள். ஆகையால் நாம் கற்றுக்கொடுக்ககூடிய விஷயங்களில் மிகவும் ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

## அதிகாரம், உண்மையாகவே யாரிடத்திலிருந்து வருகிறது?

ஆண், பெண், பெற்றோர் என்ற நம்முடைய பின்னிப்பிணைந்த இந்த உறவில், அதிகாரங்களை நாம் யாரிடமிருந்து பெற்றுக்கொள்கிறோம்? தலைமையேற்று நடத்துவது. கீழ்ப்படிந்துபோவது, என்பதெல்லாம் சாதாரணமாக வழக்கத்தில் உள்ள ஒன்று, மற்றபடி இதில் ஏதும் விசேஷம் இல்லையென்று மக்கள் அநேக சமயங்களில் நினைத்து விடுகிறார்கள். ஆண்கள் தங்களுக்கேயுள்ள பலத்தால் பெண்களை ஆளுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு பொதுவாக நிலவி வருகிறது. பெண்களும் தங்கள் கணவனுக்கு கீழ்ப்படிந்து நடக்கும்போது, மிகவும் அற்பமாய் சுய நலமாயும் ஆண்களால் நடத்தப்படுகிறார்கள் என்ற எண்ணம் இருந்து வந்தது. இன்றைய நாட்களில் அநேக குழந்தைகள் எந்தவிதமான அதிகாரங்களையும் மதிப்பதில்லை. தங்களை கண்டிக்கிறவர்களிடம் ஒருவிதமான ஆத்திரத்துடனும், கீழ்ப்படிய மனமில்லாமலும் கூடிய முகத்தை வைத்துக்கொண்டும் உள்ளனர். உதாரணமாக பெற்றோர், ஆசிரியர், அதிகாரிகள், அரசாங்கம் போன்றோரிடம் இவ்வாறு நடந்து வருகிறார்கள்.

அதிகாரங்கள் தேவனிடத்திலிருந்து வருகிறது. அவர்தான் எல்லா மனித இனத்திற்கும், மனித இனம் சம்பந்தப்பட்டவைகளுக்கும் சர்வ அதிகாரி. ஆண்கள் குடும்பத்திற்கு தலையானவன் என்று அவர் சொல்லும்போது அந்த தகுதியான வேலைக்கு அவனை நியமித்தார் என்பதை சிருஷ்டிகர் என்ற அதிகாரத்தால் அவர் அவ்வாறு கூறுகிறார். ஆணுக்கு துணையான பெண்ணை உருவாக்கி, வாழ்க்கையில் அவளுடைய பங்குகளை நியமிக்கும்போது மீண்டும் சிருஷ்டிகர் என்ற அதே அதிகாரத்தில்தான் அவ்வாறு செய்கிறார். எந்த ஒரு மனிதனும் தேவனுடைய அதிகாரம் அவருடைய கட்டளை, அவருடைய ஒழுங்குமுறை மீது சவால் விட்டு பெற்றுவிடமுடியாது.

இந்தப் பொறுப்பை ஒரு மனிதன் ஏற்றுக்கொள்ள மறுக்கும்போது, குற்றம் சாட்டுகின்ற மகிழ்ச்சியில்லாத மனைவியோடு வேண்டா வெறுப்பாக வாழவேண்டிவரும். தேவன் தன்னுடைய அதிகாரத்தால் சொன்ன கட்டளைக்கு இவன் கீழ்ப்படியாததுதான் இந்த எதிர்ப்புக்கு காரணம். தங்கள் கணவன் மார்களின் தலைமைத்துவத்தை ஏற்காத பெண்களுக்கும் இதே நிலைதான். தேவனோடு அவள் போர் செய்கிறவளாக காணப்படுவாள்.

இந்த உண்மையை ஆண்களும், பெண்களும் தங்கள் பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுப்பது அவசியம். ''நான் உனக்கு சொல்கிறேன் நீ இதைசெய்'' என்று பெற்றோர் பிள்ளைகளிடத்தில் சொல்லக் கூடாது. அதே, நேரத்தில், தாங்கள் பெற்றோராய் இருப்பதால், பிள்ளைகளுக்காக தேவனுக்குப் பதிலளிக்கவேண்டிய பொறுப்பு இருப்பதால், நாங்கள் அப்படி செய்கிறோம் என்பதை வலியுறுத்தவேண்டும். இப்படிச்செய்வது அவர்களிடையேயுள்ள பெற்றோருக்கு

விரோதமாக எழும்பும் ஆத்திர குணம், உதாசினப்படுத்துதல் ஆகிய தன்மைகளை களைந்தெறியச் செய்ய உதவும். அத்தோடு கூட தேவனுடைய அதிகாரத்திற்கு அவர்கள் தங்களை தகுதிப்படுத்த அது பிரயோஜனமாயிருக்கும்.

*"பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம். உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும்,பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும், உன் தகப்பனையும் உன் தாயையையும் கனம்பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது. பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக"* (எபே.6:1-4). *"பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்கு எல்லா காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள்; இது கர்த்தருக்குப் பிரியமானது"* (கொலோ.3:20)

பிள்ளையானவன் தங்கள் பெற்றோர் தேவனுடைய அதிகாரத்திற்கு கீழே கொடுக்கப்பட்டவர்கள் என்பதை கட்டாயம் உணரவேண்டும். தேவனிடத்தில் அன்பு கூருதல், பெற்றோருக்கு கீழ்ப்படிதல், சட்டங்களுக்கு கீழ்ப்படிதல், இப்படியே ஆயிரக்கணக்கான ஒவ்வொரு காரியங்களுக்கும், பெற்றோர் தங்கள் பிள்ளைகளிடம் தங்கள் சொந்த இஷ்டப்படி அதிகாரம் செலுத்தவே கூடாது. பெற்றோர்கள் பிள்ளைவளர்ப்பு சம்பந்தமாக எப்படி தேவ சட்டத்திற்கு கீழ்ப்படியவேண்டுமோ அதேபோல் பிள்ளைகளும் பெற்றோருக்காக அல்லாமல் தேவனுக்காக அப்படிச் செய்யவேண்டும்.

மனித உறவு என்ற சொத்துக்களை ஒருதலை முறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு அனுப்புவதென்பது பயத்துடனும், பொறுப்புடனும் செய்யப்படக் கூடிய வேலையாகும். குடும்பத்தலைவனாய் இருப்பதால் ஒரு கணவனுக்கு இதில் பங்குண்டு.ஆனால் மனைவியானவள் வீட்டிலிருந்து கொண்டு தன் பிள்ளைகளை போஷிக்கும் தனி சிலாக்கியம் பெற்றிருப்பதால், அவள் கணவனைக் காட்டிலும் பிள்ளைகளுக்கு அதிகம் கற்றுத்தரமுடியும். இவைகள் நாம் பிடித்துக் கொள்ளும்படியாக நம் வாழ்க்கையில் கிடைத்த தேவசித்தமாகும். இவைகளின்படி செய்கிற குடும்பங்கள் பாக்கியமுள்ளவைகள்.



**B. B. சோட்** **R. R. நாயகம்.**

# சாமுவேல் ஒரு கண்ணோட்டம் 1 ம்

**1. காலம்** : சுமார் 1010 கி.மு.

**2. ஆசிரியர்** : சாமுவேல் என்று பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப் படுகிறது. ஆனால், இந்நூலின் சில பகுதிகள் இவருடைய காலத்திற்குபின் எழுதப்பட்டிருக்கிறது. (1.சாமு.25:1; 27:6)

**3. இந்நூல் பற்றி** :

அ) இந்நூல் இஸ்ரவேலின் தேச வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததோடு மட்டுமல்லாமல், கர்த்தரின் சபைக்கும் இது ஒரு முக்கிய நூலாக இருக்கிறது. (அப்.3:24).

ஆ) மற்ற அரசர்களைப்போலில்லாமல், இஸ்ரவேலின் ராஜா, நியாயப் பிரமாணத்திற்கு உட்பட்டவராயிருக்கிறார். இராஜா, ஆசாரியனின் வேலையை செய்யலாகாது என்று இப்புத்தகம் நமக்கு கற்றுத்தருகிறது.

இ) "மனுஷன் பார்க்கிறபடி கர்த்தர் பார்ப்பதில்லை" என்பதே இந்நூலின் செய்தி (1.சாமு.16:7).

ஈ) இந்நூல்,நியாயாதிபதிகளின் காலத்தையும், ராஜாக்களின் காலத்தையும் இணைக்கும் பாலமாக திகழ்கிறது.சவுல், தாவீது ஆகிய இருவரின் அபிஷேகத்தைக் குறித்தும் இந்நூல் நமக்கு கூறுகிறது.

உ) இஸ்ரவேல், தெய்வீக அரசாட்சியை உடையதாக இருந்த போதிலும், அரசாட்சியும்,அருளாட்சியும் தனித்தே இயங்கின. ஆசாரியர்களும், ராஜாக்களும் கர்த்தருக்கு ஊழியம் செய்யும்படி அபிஷேகம் செய்யப்பட்ட போதிலும் இருவருக்கும் தனிப்பட்ட செயல்பாடுகளே இருந்தன.

4. **இந்நூலின் நோக்கம்:**

இராஜாக்கள் ஏற்படுத்தப்பட்டதையும்,அதில் சாமுவேலின் பங்கையும் ஏடுத்துரைப்பதாக இந்நூல் விளங்குகிறது. சாமுவேல் ஒரு நியாயாதி பதியாகவும்(1.சாமு.7:6,15-17) தீர்க்கதரிசியாகவும், (1.சாமு.3:20) இருந்தான்.

(வாலிபர் பகுதி)

# யோர்தான் நதிக்கரையில்...

அகிலத்தையும் ஆகாயத்தையும் தமது பராக்கிரமத்தினாலே பரம ஞானத்தைக்கொண்டு உருவாக்கின உன்னத தேவனால், விசித்திர விநோதமாய் வையகத்தின் மண்ணைக்கொண்டு வனையப்பட்ட மானுடம், ஒரு நிலை விட்டு மற்றொன்றுக்கு மாறுகிறதாய் இருக்கிறது. இப்படி நிகழும்போது மனிதன் தன்னுடன் பசுமையான, சிறந்தகளிப்பைத் தரக்கூடிய காரியங்களையும், தன் மனதை மிகவும் பாதித்த நிகழ்வுகளையும் பத்திரமாய் பதித்து, அதை பக்குவமாய் சுமந்து கொண்டு போவான் என்பதில் புல்லளவும் ஐயமில்லை.

சீறிவரும் சிங்கத்தின் வாயை துணித்திரைபோல் கிழித்தெறிந்த சங்கீதக்காரனாகிய தாவீது, ***''வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர்''*** (சங்.65:11) என்று தேவனின் சிறப்பைக் குறித்து விளம்புகிறான். ஆனாலும், ஓராண்டைக் கடந்து புதுவருடத்தின் புகு வாசலுக்குள் அடி எடுத்து வைத்திருக்கும் நாம், சென்ற வருடத்தின் நினைவலைகளை நம் நெஞ்சில் தாங்கியவர்களாய் இம்முதல் மாதத்தை செலவிடுவதோடல்லாமல் நம்முன் எழில்மிகு தோற்றமுடன் எழும்பிநிற்கும் இவ்வருடம் எப்படியிருக்குமோ என்ற வினாவும், கடல் அலையில் மிதக்கும் கூழாங்கல்லைப்போல் நம் நினைவலையில் மிதக்கும் என்பதில்என்னோடு நீங்களும் கைகோர்ப்பீர்கள் என நம்புகிறேன்.

## யோர்தான் நதிக்கரையில் யோசுவாவின் யோசனைகள்

எகிப்தின் ஏகாதிபத்தியத்தை, ஏகச்சக்கராதிபதியான யெகோவா தேவனின் துணைகொண்டு வீழ்த்தி, மோசேயின் தலைமையில் வெளியேறின இஸ்ரவேல் ஜனங்களை அவனுக்குப்பின் தேவ தாசனாகிய யோசுவா வழிநடத்தினான். நாற்பது வருடம் வனாந்திரத்தில் சுற்றித்திரிந்த இஸ்ரவேலர்கள் கானான் தேசத்தை சுதந்தரிப்பதற்கு யோர்தான் நதியைக் கடந்து செல்லவேண்டியதாயிருந்தது. இஸ்ரவேல் யோர்தான் நதிக்கரையில் பாளயமிறங்கியிருந்த சமயத்தில், ***''யோசுவா ஜனங்களை நோக்கி; உங்களை பரிசுத்தம் பண்ணிக்கொள்ளுங்கள் நாளைக்கு கர்த்தர் உங்கள் நடுவிலே அற்புதங்களைச் செய்வார் என்றான்''*** (யோசுவா.3:5).

வாலிபர்களே! கர்த்தர் இவ்வருடத்திலாவது என் இருதயத்தின் ஏக்கத்தை தீர்ப்பாரா? ***''நெடுங்காலமாய்க் காத்திருக்குதல் இருதயத்தை இளைக்கப் பண்ணும்; விரும்பினது வரும்போதோ ஜீவவிருட்சம் போல் இருக்கும்''*** (நீதி.13:12) என்கிற ஞானியின் கூற்றுக்கேற்ப என் வாழ்வின் இவ்வாண்டிலாவது '' விரும்பினது வருமா? என் இருதயத்தின் இளைப்புகள் தீருமா?'' என்கிற கேள்வி

உங்கள் கண்ணீர் வழியாய் ஓடிவருவது என் விழிவழியாய் புகுந்து மனதிற்கு புலப்படுகிறது.யோசுவா ஜனங்களிடம் சொன்னதைக் கவனித்தீர்களா! கர்த்தர் நம் நடுவில் அற்புதம் செய்வார், ஆனால் அதற்கு முதலில் தேவைப்படுவது நமது பரிசுத்தம் என்கிறார். இளைஞர்களாகிய நாம் நம்மை பரிசுத்தமாக்கினால் தேவன் இன்று நேரிடையான அற்புதங்களை நம் நடுவே செய்வதில்லையென்பது மெய்யானலும், நம் ஆத்துமா வாழ்வது போல் நம்மை எல்லாவற்றிலும் வாழ்வாங்கு வாழவைப்பார் என்பது சூரிய உதியம் போல் சந்தேகமற்றதாய் இருக்கிறது.

இஸ்ரவேல் கானான் தேசத்தை சுதந்தரிப்பதற்கு தடையாக இருந்தது யோர்தான் நதி ஓரளவிற்கு நீந்தத் தெரிந்த ஒருவன் கூட அதில் இறங்கினால் மரணத்தை சந்திப்பான் என்பதில் கொஞ்சமேனும் சந்தேகமில்லை. ஏனெனில், யோர்தான் அறுப்புக்காலத்தில் கரைப்புரண்டோடும், அது மாத்திரமல்ல, இந்நதி மேலிருந்து கீழ்நோக்கி படுபயங்கர வேகத்தில் பாய்ந்து வரும் ஒன்றாக திகழ்கிறது. (யோசுவா.3:10) இப்படி காட்டாற்று வெள்ளம் போல் பாய்ந்து வருகிற யோர்தானை ஒரு குவியலாக குவித்து, வெட்டாந்தரையை உண்டாக்க, ஆசாரியர்களை தேவன், தனது உடன்படிக்கை பெட்டியைச் சுமந்தபடி யோர்தானின் தண்ணீர்களில் கால் வைக்கச்சொன்னார். பெட்டியை சுமந்த ஆசாரியர்களின் கால்கள் தண்ணீரில் பட்டவுடனே மேலிருந்து ஓடிவரும் தண்ணீர் ஒருமண் குவியலைப்போல் குவிந்து வான்நோக்கி எழும்பி நின்றது. தண்ணீர் தொடர்ந்து, இஸ்ரவேல் நிற்குமிடத்திற்கு வராததின் காரணத்தினால் அவ்விடம் வெட்டாந்தரையாய் சூரியனின் கதிர்களை நேரடியாய் பெற்று மிலிறிக்கொண்டு ஜனங்களின் கண்களில் காட்சியளித்தது. வெட்டாந்தரையைக் கண்ட ஜனங்கள் கர்த்தரைத் துதித்த வண்ணம், யோர்தானின் மண்ணில் கால்மிதித்து கடந்து சென்றார்கள்.

இளைஞர்களே! சாத்தானின் சதிச்செயலால் ஆதிமேன்மையையும் சுதந்திரத்தையும் இழந்த நம்முன்னும் மரணம் என்கிற யோர்தான் கரைபுரண்டோடு கிறது. ஆசாரியர்களின் கால் பட்ட மாத்திரத்தில் விலகி, குவிந்து நின்றது அந்த யோர்தான் நதி. ''ஜீவ காலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனத்திற் குள்ளான யாவரையும் விடுதலை பண்ணும்படி'' (எபி.2:15) நமதுபிரதான ஆசாரியராகிய இயேசு கிறிஸ்து புதிய உடன்படிக்கையை சுமந்தவராக மரண நதியில் தன் குதிங்கால் நசுக்கப்பட்டதின் மூலம் மூழ்கினதால், ''மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே!'' (1.கொரி.15:55) என்று பூர்வ காலத்தில் நம்பிக்கையிழந்து இருந்து நாம் கேட்கும்படிக்கு நமக்கு மறுமையின் நம்பிக்கை என்கிற வெட்டாந்தரையை உண்டாக்கி இருக்கிறார்.

ஜெயவேந்தனாகிய இயேசு கிறிஸ்து தமது மரணத்தினால், நமது மரண பயத்தை நீக்கும்படியாக சிலுவையிலே மரித்து பின்பு, தான் சொன்னபடி உயிர்த் தெழுந்து புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராகத் திகழ்கிறார் (எபி.12:24).அவர், ''நானே வழி'' (யோவான். 14:6) என்றும் விளம்புகிறார். வாலிபர்களாகிய நாம்

இதைக் கவனத்தில் கொண்டு அவர் வழியாய்,அவர் மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி(பிலி.3:10) (திருமுழுக்கு பெற்று) அவர் கைக்கொள்ளும்படி நமக்கிட்ட கட்டளைகளில் முடிவுபரியந்தம் நிலைத்திருந்தால் அவர் ஆயத்தம் செய்யப்போயிருக்கிற பரம வாசஸ்தலத்திற்கு நம்மை அழைத்துச் செல்வார். வாலிபர்களாகிய நாம் இந்த பிராயத்திலேயே சிருஷ்டி கர்த்தரின் சித்தமறிந்து, நித்தம் அவர் வழிநடக்க நம்மை தத்தம் செய்ய வேண்டும்.

யோர்தான் நதியைக் கடக்கும் இஸ்ரவேல் ஜனங்கள் அதன் நடுவே இருந்த பன்னிரண்டு கற்களை எடுத்து, இவ்வற்புதத்தின் நினைவாக அவர்கள் இராத்தங்கும் இடத்தில் வைக்கச்சொன்னார் தேவன் . அப்பொழுது ,***"இந்த கற்கள் ஏதென்று உங்கள் பிள்ளைகள் கேட்கும்போது"*** இதை விவரித்துக் கூறுங்கள் என்றார். வாலிபர்களாகிய நாம், நமது பெற்றோர்கள் தேவகாரியத்தை நமக்கு எடுத்துச் செல்லும்போது எரிச்சலும் வெறுப்பும் அடைகிறோம். அவர்கள் தேவ கட்டளையை நிறைவேற்றுகிறார்கள் என்றோ நமது சுகவாழ்விற்காகத் தான் இப்படி சிறத்தை எடுத்த கர்த்தரின் காருண்யத்தை கருத்தாய் பேசுகிறார்கள் என்றோ எண்ணுவதில்லை.

யோசுவாவின் நாட்களில் யோர்தானைக் கடந்த இஸ்ரவேலர்கள் அதன் நினைவாக பன்னிரண்டு கற்களை தங்கள் தோள்களில் சுமந்து வந்து கில்காலில் நட்டார்கள் என்று காண்கிறோம். அது அவர்களோடு மாத்திரமல்ல அதற்குப்பின் வரும் சந்ததியார்களோடும் பேசும் கற்களாக திகழ்ந்தது. அது எப்படி? கல் பேசினதா? என்று உங்கள் உள்ளங்களில் வினா எழும்புகிறது நியாயமே. விடை கிடைக்க தொடர்ந்து படியுங்கள். பன்னிரண்டு கற்கள், அதுவும் ஒழுங்காகவும் சீராகவும் அடுக்கி வைக்கப்பட்டிருக்கிற இவைகளைப் பார்க்கிற எந்த யூதனும் தன் உள்ளத்தில் இதற்கும் கோத்திர எண்ணிக்கைக்கும் சம்பந்தம் இருக்குமோ? இது இங்கு எப்படி, ஏன், எதற்கு வந்தது? என்கின்ற அறிவுக் கேள்வி எழுவதுறுதி. இப்படி நம்மை நாமே கேள்விகள் கேட்டுக்கொள்வதால் இந்தக் கற்கள் நம்மிடம் வினாத் தொடுத்து பேசுவதுபோல் இருக்கிறது என்ற கருத்தை இதில் ஏற்றிச்சொல்லுகிறேன்.

யோர்தான் நதியைக் கடந்த அவர்கள் தங்களுக்கும், தங்கள் சந்ததிக்கும் பயன்தரும் கற்களை சுமந்து வந்ததுபோல் சென்ற ஆண்டை கர்த்தருடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும் கடந்த நாமும் சில கற்களை சுமந்தவர்களாய் திகழ்வது அவசியம். அப்படி நாம் சுமந்து நிற்கையில் நம்மைப் பார்த்து ஏன் இந்தக் கற்கள் என்று கேட்கும்பொழுது தேவ மகத்துவங்களை நாம் எடுத்துச் சொல்வதற்கு அது ஒரு பேருதவியாக, தூண்டுகோலாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. வாலிபர்களாகிய உங்கள் மனதில் என்ன கற்களை சுமக்க வேண்டும் என்கிற எண்ணம் எழும்பும் என்று நம்புகிறேன். கர்த்தருக்குச் சித்தமானால் அதை நாம் அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து பார்ப்போம்.

கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

**ஜே. பிக்கின்ஸ்.**

# "உபத்திரவத்தில் ஆசீர்வாதம்"

அகஸ்டின் என்பவர் ஒருமுறை இப்படிக் கூறினார். "தேவன், பூமியின் மீது பாவமில்லாத ஒரு குமாரனை உடையவராயிருந்தார், ஆனால், பாடுகள் இல்லாத ஒருவர் அவருக்கு ஒருபோதும் இருந்ததில்லை" . வாழ்க்கை என்பது நம்மில் ஒருவருக்கும் எளிதான பாதையல்ல. யோபு கூறுகிறார், ***"ஸ்திரீயினிடத்தில் பிறந்த மனுஷன் வாழ்நாள் குறுகினவனும், சஞ்சலம் நிறைந்தவனுமாயிருக்கிறான்"***. (யோபு.14:1) மனிதன் எப்போதும் கொல்லன் பட்டறை அல்லது உலைக்களத்தில் இருக்கிறான். வாழ்க்கை, உபத்திரவம் மற்றும் சோதனை என்கிற சுத்தியல்களினால் தட்டப்பட்டு வடிவமைக்கப்படுகிறது.

நான் கவனமாய் கண்டது யாதெனில், உபத்திரவமே, ஒருவனை பலவான் என்றும் மற்றொருவனை பலவீனன் என்றும் நிரூபிக்கிறது. சீதோஷ்ண நிலை நன்றாய் இருக்கும்போது மண்ணின் மீது கட்டிய வீடு, பாறை மீது கட்டிய வீட்டைப் போன்றே நல்லதாய் தோன்றும். பெருமழை சொரிந்து வெள்ளம் வருகிறபோதுதான் வேறுபாடு வெளிப்படும்.ஒரு தடி பலமிக்கதா, அல்லது பலமில்லாததா? என்று அறிந்துகொள்ள,அதின் மேல், எடை ஏற்றும் போது நாம் கவனிக்கவேண்டும். அழுத்தம் இல்லாதவரை சிலந்திவலையும் தந்திக்கம்பி போல பலமாகவே தெரியும்.

உண்மையான நற்குணசாலி ஒரு நல்ல உலோகத்தைப்போல - அதிகமாய் தீயிலிடப்படுகிற அவன் அதிகமாய் சுத்தமாவான். கூர்மையானதும், கடினமானதுமான கருவிகளைக் கொண்டு தான் அதிகமாய் நேசிக்கும் இரத்தினங்களை, ஜொலிக்கும் பிரகாசம் உடையதாய் தேவன் மெருகு ஏற்றுகிறார். அதிகமாய் வெட்டி மெருகு ஏற்றப்படுகிற வைரமே அதிகமாய் ஜொலிக்கும். உபத்திரவ உலையிலே, சோதிக்கப்பட்டு,உருக்கப்பட்டு, மெருகு ஏற்றப்பட்டவர்களே பரலோகத்தில் பிரகாசமுள்ள கிரீடங்களை அணிந்திருப்பார்கள்.

கிறிஸ்துவின் நிமித்தம் வரும் .உபத்திரவத்தினால் இருதயத்தில் இரத்தம் சிந்துவது கிறிஸ்தவனுக்கு கிடைத்த முதன்மையான ஆசீர்வாதம். உபத்திரவம், தேவனுடைய பிள்ளைகளை, சந்திக்க அவர் அனுமதிக்கிறார். ஆனால் அதின் நோக்கத்தையும் தேவன் கூறுகிறார். ***"உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நீங்கள் அறிந்து "*** (ரோமர்.5:4) இயேசுவுக்கு, மறுரூபமலை சிலுவையின் பாதையாக அமைந்திருந்தது. நம் ஒவ்வொருவருக்கும், சிலுவை மறுரூபமலைக்கு பாதையாக அமைந்திருக்கிறது. பூமியில் சிலுவை சுமப்போர் பரலோகத்தில் கிரீடம் அணிந்தோராய் திகழ்வார்கள்.

# வேதாகமக் கேள்வி – பதில்

கேள்வி : 1. எரே. 6:16-ல் உள்ள '' பூர்வ பாதைகள்'' என்பவை எவை?

பதில் : தெற்கு இராஜ்ஜியமாகிய யூதா, தங்கள் பிதாக்களின் தேவனை மறந்து, பொய்யான தேவனைப் பின்பற்றினார்கள் (எரே.2:28). ஆகவே, எரே.6:16, யூதா, யெகோவாவினிடத்தில் திரும்பவரும்படியும், அவரின்,சித்தமாகிய, (''பூர்வ பாதையில்'')நிலைத்திருக்கும்படியும் அழைக்கிறது. ''ஆனால், அவர்கள் அதிலே, நாங்கள் நடக்கமாட்டோம்'' என்று சொன்னார்கள். (வசனம் 16). அதன் விளைவாக, எருசலேம் பிடிபட்டு (38:28) யூதா பாபிலோனின் அடிமைத்தனத் திற்குள்ளாக போனது.

இதிலிருந்து, கிறிஸ்துவின் காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிற நமக்கு கிடைக்கின்ற ஒரு உறுதியான பாடம் என்னவெனில், நாம் தேவனைப் பிரியப்படுத்த வேண்டுமெனில், இயேசுக்கிறிஸ்துவால் கொடுக்கப்பட்ட ''பூர்வபாதையாகிய'' புதிய ஏற்பாட்டை விட்டு,வலது இடது புறம் சாயாமல் நடக்கவேண்டுமென்பது.

கேள்வி : 2 ''பலியைக் காட்டிலும், கீழ்ப்படிதல் மேலானது'' என்பதன் பொருள் என்ன?

பதில்: இது 1.சாமு.15:22-ல் இடம்பெற்றுள்ளது. இதே அதிகாரம், வசனம் 3-ல் தேவன், அமலேக்கியரை ''முற்றிலும் சங்காரம்'' பண்ணு என்று சவுலிடம் கூறுகிறார். அவன் கீழ்ப்படியாமல், ராஜாவாகிய ஆகாகை உயிரோடே பிடித்ததோடல்லாமல் (வசனம் 8) மந்தைகளில் சிறந்தவைகளையும் விட்டு வைத்தான். (வசனம் 9) அவைகளை தேவனுக்கும் பலியிட வேண்டுமென்ற எண்ணத்தில் அப்படிச் செய்தான். சாமுவேல், சவுலைப் பார்த்து, '' முற்றிலும் சங்காரம் பண்ணு'' என்று சொல்லப்பட்டவைகளை வைத்து தேவனுக்குப் பலியிடுவதைக் காட்டிலும்,அவருக்குக் கீழ்ப்படிவது மேலானதாக இருந்திருக்க வேண்டுமென்று சொல்லுகிறான். இந்தக் காரியத்தில்,அவன் தேவனுக்கு விரோதமாக செயல்பட்டதினிமித்தம், சவுல், ''கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்தார் '' என்று சாமுவேல் சொல்கிறார். ஆகவே, அவன் ராஜாவாக இராதபடி தேவன் புறக்கணித்தார்.(வசனம்.23). நமக்கு, இது தரும் பாடம் என்னவெனில், தேவனுக்கு உண்மையாகக் கீழ்ப்படிந்து வசனத்தின்படி ஆவியோடும், உண்மையோடும் ஆராதிப்பது தான் முக்கியமேயொழிய, மன விருப்பத்தின்படி செய்வதல்ல.

கேள்வி : 3 '' தன் இருதயத்திற்கேற்ற தாசன்'' என்று தேவன் ஏன் தாவீதை அழைத்தார்?

பதில் : தேவனால் இருதயத்தைப் பார்க்க முடியும். அவர் தாவீதின் இருதயத்தைப் பார்த்தார். (1.சாமு.16:7). தாவீது எப்படிப்பட்ட மனிதன் என்பதை அறிந்தார்! அவன் விபச்சாரமும், கொலையும் செய்து பாவம் செய்திருந்தாலும், இஸ்ரவேலின் இந்த மகத்தான ராஜா, தனது தவறுக்காக வருந்துபவனாகவும், தாழ்மையுள்ளவனாகவும், தேவன் மீது பக்தியுள்ளவனாகவும் இருந்தான் என்பதை யார் மறுக்க முடியும்? தாவீது பாவம் செய்யமாட்டான் என்று தேவன் ஒரு போதும் சொல்லவில்லை. நம்மைப் போல அவனும் ஒரு பாவிதான்.

நம்முடைய பெலவீனங்கள், தோல்விகளுக்கு மத்தியில், நாம் இந்த மகத்தான ராஜா போல், தேவனுக்கேற்ற குணங்களை வெளிப்படுத்துவோமானால், நாமும் தேவனுடைய இருதயத்திற்கேற்ற மக்களாக மாறமுடியும்.

கேள்வி -4: உடன்படிக்கைப் பெட்டியைத் தொட்ட, ஊசா ஏன் கொல்லப்பட்டான்? (1.நாளா.13:9-10)

பதில் : தேவனுடைய கட்டளையை மீறி,தனது கையை நீட்டி அதைப் பிடித்தான். (2.சாமு.6:6) அவர்கள் ''பரிசுத்தமானதைத் தொடாதிருங்கள்'' என்று தேவன் ஏற்கனவே கட்டளை கொடுத்திருந்தார்'' (எண்.4:15). உடன்படிக்கைப் பெட்டியைத் தொட்டதினால், ஊசா பாவம் செய்து தேவனுடைய கோபத்தை தனக்கு விரோதமாகக் கிளறிவிட்டான். (1.நாளா.13:10). 1.கொரி.10:11-ல் சொல்லியுள்ளபடி, '' ... உலகத்தின் முடிவு காலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாகும்படி எழுதப்பட்டுள்ளது''. நாம், கீழ்ப்படிய வேண்டுமென்றே தேவன் எதிர்பார்க்கிறார். பாவத்திற்கு மன்னிப்பென்பதே இல்லை. (1.சாமு.15:22-23).

**''விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்...''** எபி.11:6

**'' ஆதலால், விசுவாசம் கேள்வியினாலே வரும். கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்''.** ரோமர் 10:17

# வெளிப்படுத்தின விசேஷம்

***அதிகாரம்: பத்து***

வெளிப்படுத்தல் பத்தாம் அதிகாரமானது ஏழாம் எக்காளம் ஊதப்படுவதற்கு முன்னும் அதனை தொடர்ந்து வரக்கூடிய கடைசி ஐயோவிற்கு முன்னும் ஒரு வகையான இடைவேளையை உருவாக்குகிறது. வசனங்கள் 1-2-ல் யோவான் '' பலமுள்ள வேறொரு தூதன் வானத்திலிருந்து இறங்கி வரக்கண்டேன்; மேகம் அவனை சூழ்ந்திருந்தது, அவனுடைய சிரசின்மேல் வானவில்லிருந்தது.அவனுடைய முகம் சூரியனைப் போலவும், அவனுடைய கால்கள் அக்கினிஸ்தம்பங்களைப் போலவும் இருந்தது. திறக்கப்பட்ட ஒரு சிறு புஸ்தகம் அவன் கையில் இருந்தது; தன் வலது பாதத்தை சமுத்திரத்தின் மேலும், தன் இடது பாதத்தை பூமியின் மேலும் வைத்து''. இந்த தூதனைப் பற்றிய விளக்கமானது தேவனுடைய அஞ்சத்தக்க வல்லமையை மிகவும் உறுதியாக எடுத்துக்காட்டுகிறது. இந்த மகத்துவமான தூதன் தேவனுடைய அதிகாரத்துடன் வந்தார். தூதனுடைய கையில் ஒரு திறக்கப்பட்ட புஸ்தகம் இருந்தது. இது முத்திரிக்கப்பட்டிருக்கவில்லை. அதில் எழுதப்பட்டிருந்தது எதுவாயினும் வாசிக்கப்படும்படியாகவும், உணர்ந்து கொள்ளும் படியாகவும் இருந்தது.

யோவான் இந்த புஸ்தகத்தை புசித்து அதை அனைவருக்கும் அறிவிக்கப் புறப்படும்படி அவருக்குச் சொல்லப்படும் போது இது இன்னும் மிக தெளிவாகும். வசனம் 3-ல், தூதன், ''சிங்கம் கெர்ச்சிக்கிறது போல மகா சத்தமாய் ஆர்ப்பரித்தான்; அவன் ஆர்ப்பரித்த போது ஏழு இடிகளும் சத்தமிட்டு முழங்கின'' இந்த ஏழு இடிகளின் வார்த்தைகளை யோவான் புரிந்து கொண்டார். வசனம் நான்கானது ''அவ்வேழு இடிகளும் தங்கள் சத்தங்களை முழங்கினபோது, நான் எழுத வேண்டுமென்றிருந்தேன். அப்பொழுது; ஏழு இடி முழக்கங்கள் சொன்னவைகளை நீ எழுதாமல் முத்திரை போடு என்று வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன் என்று கூறுகிறது''. ஏழு இடிகள் சொன்னவைகளை கேட்ட யோவான் அவற்றை எழுத தடை செய்யப் பட்டார். அதைக் குறித்து வாதம் செய்வது பொருத்தமற்றது. ஆயினும் வெளிப் படுத்துதல் 10:4னது, வெளிப்படுத்தல் புத்தகத்தின் வார்த்தை, வார்த்தையாக ஏவப்படுதலுக்கு முழுவதுமாக அருமையான கருத்துரையாக உள்ளது. யோவான் தான் கேட்டதையே சரியாக எழுதினார். அவர் எழுதும்படியாக அவருக்குச் சொல்லப் பட்டது, அதை மட்டுமே எழுதும்படியாக சொல்லப்பட்டது. அவர் அதை வார்த்தைக்கு வார்த்தை எழுதினார்.யோவான் தன்னுடைய சொந்த வார்த்தைகளை உபயோகிக்கவும் இல்லை அல்லது அந்த புத்தகத்தில் என்ன இருக்க வேண்டும் என்பதை முடிவு செய்யவும் இல்லை. ஒவ்வொரு வார்த்தையும் தேவனிடத்திலிருந்தே வந்துள்ளது. வெளிப்படுத்துதல் 1:1-3ல் நாம் வாசிக்கிறபடி,

யோவான், ***''தேவனுடைய வசனத்தைக் குறித்தும், இயேசு கிறிஸ்துவைப்பற்றிய சாட்சியைக் குறித்தும், தான் கண்ட யாவற்றையும் குறித்து சாட்சியளித்தார்''. மெய்யாகவே, '' வேத வாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது''*** (2.தீமோ.3:16)

வசனங்கள் 5-6ல், தூதன், '' தன்கையை வானத்திற்கு நேராக உயர்த்தி'' தேவன் பேரில் (அவர் சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவராகவும் எல்லாவற்றையும் சிருஷ்டித்தவராகவும் விளக்கப்பட்டுள்ளார்) '' இனி காலம் செல்லாது'' என்று ஆணையிட்டார். யாதொன்றுக்கும் இனி காலம் இராது என்று அவர் அறிவிக்கவில்லை. பதிலாக, மனிதனுக்கான தேவனுடைய வெளிப்படுத்துதல் நிறைவடைகிறது என்று தூதனானவர் அறிவித்தார். அவர் அதை '' தேவன் தம்முடைய ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிகளுக்குச் சுவிசேஷமாய் அறிவித்தபடி, ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே அவன் எக்காளம் ஊதப் போகிறபோது தேவ ரகசியம் நிறைவேறும் என்றும் அவர் சொன்னார்'' (வெளிப்படுத்தல் 10:6). இக்கால கட்டம் வரையில் தேவன் தீர்க்கதரிசிகளுக்கு தம்முடைய இரகசியத்தை அறிவித்து வந்தார், ஆயினும் அதற்கான காலகட்டமானது விரைவில் முடிவடையும். வேதாகமத்தின் கடைசி புத்தகம் வெளிப்படுத்துதல் என்பதை நினைவில் கொள்ளவும், அதனோடு வேறேதேனும் கூட்டப்படமாட்டாது(வெளி.22:18-19). அச்சமயத்தில், '' சகல சத்தியமும் முழுவதுமாக வெளிப்படுத்தப்படும் (யோவான் 16:13), தேவன் தம்முடைய வார்த்தையைப் பேச நேரடியாக மனுஷரை இனி ஏவப்போவதில்லை. தேவனிடத்திலிருந்து இன்றைக்கும் மனுஷன் தொடர்ந்து வெளிப்படுத்துதலை பெறுகிறான் என்ற பெந்தெகொஸ்தேயினர் மற்றும் இதர மக்களால் கைக்கொள்ளப்படுகிற கள்ள உபதேசத்தை இவ்வசனப்பகுதி பலமாய் முறியடிக்கிறது. மனிதனுக்கான தேவனுடைய வெளிப்படுத்துதல். '' தம்முடைய ஊழியக்காரராகிய தீர்க்க தரிசிகளுக்கு அவர் அறிவித்த'', '' தேவனுடைய இரகசியமானது'' மெய்யாகவே வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்துடன் '' முடிவடைந்தது''.

மனிதன் இன்றைக்கு தேவனுடைய வார்த்தையை, கேள்விப் படுதலின் வழி வகையானது வசனங்கள் 8-11-ல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது, அது பிரசங்கிக்கப்படுவதினாலாகும். வசனம் 8-ல்,'' சமுத்திரத்தின் மேலும் பூமியின் மேலும் நிற்கிற தூதனுடைய கையிலிருக்கும் திறக்கப்பட்ட சிறு புஸ்தகத்தை நீ போய் வாங்கிக் கொள் என்று சொல்லிய'' சத்தத்தை யோவான் வானத்திலிருந்து பிறக்கக் கேட்டார். வசனம் ஒன்பதில், யோவான், '' தூதனிடத்தில் போய்; அந்த சிறு புத்தகத்தை எனக்கு தாரும் என்றேன்.அதற்கு அவன்; நீ இதை வாங்கிப் புசி; இது உன் வயிற்றுக்கு கசப்பாயிருக்கும், ஆகிலும் உன் வாய்க்கு இது தேனைப்போல மதுரமாயிருக்கும் என்றான். தூதன் சொல்லியபடி யோவான், ''சிறு புஸ்தகத்தை தூதனுடைய கையிலிருந்து வாங்கி அதை புசித்தார்'' அது அவருடைய

வாய்க்கு தேனைப் போலானது ஆனால் அவர் வயிற்றையோ கசப்பாக்கிற்று(வெளி 10:10). ''சிறு புஸ்தகமானது'', யோவான் தீர்க்க தரிசனம் சொல்லும்படியாக புறப்பட்டு சென்ற போது அவருடைய வாயிலிருந்தது தேவனுடைய வார்த்தையாகும், பெரும்பாலும் வெளிப்படுத்தல் புஸ்தகத்திற்கு தொடர்புடையதாகவும் உள்ளது என்பதில் ஐயமில்லை ('' சிறு புஸ்தகமானது'' வேதாகமம் அனைத்திற்கும் முழுமையாய் பொருந்தக் கூடியதாயிராது) ஒருவேளை மீதமுள்ள (அதிகாரங்கள் 11-22) பாகமாய் மாத்திரம் இருக்கலாம். தேவனுடைய வார்த்தையானது எந்த ஒரு உண்மையுள்ள தேவனுடைய ஊழியக்காரனின் சுவைக்கு இனிமையாக இருக்கும் (சங்.19:7-11; 119:103; நீதி.24:13-14). எசேக்கியேல் தன் புஸ்தகத்தை புசித்தார் அது அவருடைய வாய்க்கு மதுரமாயிருந்தது (எசேக்.3:1-4).

எரேமியா சொன்னது, *'' உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்; உம்முடைய வார்த்தைகள் எனக்கு சந்தோஷமும், என் இருதயத்திற்கு மகிழ்ச்சியுமாயிருந்தது''* (எரே 15:16). ஆனால் தேவனுடைய வார்த்தையானது துன்மார்க்கத்திற்கு எதிராக கடுமையான தீர்ப்புகளை அறிவிக்கிறது. தேவனுடைய வார்த்தை பிரசங்கிக்கப்பட்ட பிறகு உபத்திரவமும் துன்பமும் எப்பொழுதும் பின் தொடரும் (மத்.13:21; மாற்கு 4:17; யோவான் 7:7; வெளி.6:9). இனிமையையும், கசப்பையும் நாம் அனுபவிப்போம்.ஆயினும் நாம் சகிக்கக் கடவோம். கசப்புக்கு மாறாய், தூதன் யோவானிடத்தில் சொன்னது, '' நீ மறுபடியும் அநேக ஜனங்களையும், ஜாதிகளையும், பாஷைக்காரரையும், ராஜாக்களையுங் குறித்துத் தீர்க்கதரிசனஞ் சொல்ல வேண்டும் என்றான்'' (வெளி.10:11). தேவனுடைய வார்த்தையானது யாவருக்குமாயுள்ளது. நன்மை செய்கிறதில் நாம் சோர்ந்து போகாமல் இருக்கக் கடவோம் (கலா 6:9; 2 தெச.3:13). தேவனையும் அவருடைய வார்த்தையைக் குறித்தும் ஒரு போதும் வெட்கப் படாமல் இருக்கக் கடவோம் (மாற்கு8:38; லூக்கா 9:26; ரோமர் 1:16; 2தீமோ 1:8; 1பேது 4:16). தேவனுடைய வார்த்தையை நாம் பின் பற்றுவதில் தொடர்ந்து நிலைத்திருந்து அதை மற்றவர்களுக்கு போதிக்கக் கடவோம் (மாற்கு 16:15; 1கொரி 15:58; 2தீமோ 1:13; 1பேது 3:15). யோவான் செய்தது அதுவே (யோவான் இந்த வெளிப்படுத்துதலைப் பெறும்பொழுது '' தேவ வசனத்தினிமித்தம்'' பத்மு தீவில் சிறை கைதியாக இருந்தார் என்பதை நினைவு கொள்ளவும், வெளி1:9). மெய்யாகவே வெளிப்படுத்துதல் 10 மிகவும் உற்சாகமளிக்கும் பாடத்தை நமக்கு போதிக்கின்றது. பெரும் உபத்திரவத்தின் போதும், தேவ வசனமானது தொடர்ந்து பரவும். ஒவ்வொரு இடையூரையும் மேற்கொள்ளும்.



**Kennedy** **Jon Macon**

# கிறிஸ்துவின் சபையின் அதிகாரம் புதிய ஏற்பாடு மட்டுமே

இப்பொழுது நீங்கள் இருக்கும் அறையின் அளவுகள் என்ன? அதின் நீள அகலம் எத்தனை அடிகளைக் கொண்டவை? 12 அங்குல குறியீட்டு அளவுகோலைக் கொண்டோ அல்லது கஜ கோலைக் கொண்டோ சரியான அளவை நீங்கள் பெறமுடியும். அதுபோலவே, பத்து அளவுகோல்களைக் கொண்டு நீங்கள் அளந்தாலும், அவைகள் அனைத்தும் ஒரே அளவைத்தான் காட்டும். மார்க்க ரீதியாகவும் எல்லோருமே ஒரே ஒரு பொதுவான அளவுகோலை அதிகாரத்திற்கான ஆதாரமாக எடுத்துக்கொண்டால்,அது ஒரே விசுவாசத்தையும், அதை கைக்கொள்ளும் முறைகளையும் வெளிப்படுத்தும். இன்று கிறிஸ்தவ மார்க்கத்தில் வித்தியாசப்பட்ட அதிகாரத்திற்கு செவி சாய்த்து வித்தியாசப்பட்ட அளவு கோல்களைக் கொண்டிருப்பதால், முரண்பட்ட பல குழப்பங்களை காணுகிறோம். நல் இருதயம் கொண்ட மக்கள், மார்க்க ரீதியாக முரண்பாடான பல உபதேசங்களைக் கேள்வியுற்று ஆச்சரியப்படுகின்றனர்.

எனவே வசன ரீதியாகவும், அறிவுப்பூர்வமாகவும் நாம் வேண்டிக்கொள்வ தென்னவெனில்; புதிய ஏற்பாடுதான் நமது ஒரே விசுவாசப்பிரமாணம்; நமது ஆசரிப்புக்கு (நடைமுறையில் கைக்கொள்வதற்கு) ஏற்ற ஆதாரம். நமது ஜீவியத்தின் அனைத்து காரியங்களிலும் வழி காட்டும் தேவனுடைய வசனத்திற்கு எல்லா மனுஷரும் திரும்பவேண்டும் என்று அறைகூவல் விடுக்கிறோம். அது ஆவிக்குரிய வாழ்க்கைக்கும், ஆராதனை முறைகளுக்கும், தனிப்பட்ட சொந்தக் காரியங் களுக்கும், குடும்ப மற்றும் வியாபாரக் காரியங்களுக்கும் பொருந்தும். எனவே ''வேதம் பேசுமிடத்தில் நாமும் பேசி'' வேதம் அமைதியாக இருக்குமிடத்தில் நாமும் அமைதிகாக்கவும், வேத காரியங்களை வேத பெயரில் அழைத்து வேத காரியங்களை வேதாகம முறையில் (வழியில்) செய்வோமாக'' என வேண்டு கிறோம்.

கிறிஸ்துவும், அவருடைய உபதேசமும் நம்மைக் கட்டுப்படுத்த வேண்டும். நாம் அவரை கர்த்தர் என்றும் இரட்சகர் என்றும் ஏற்றுக்கொள்ளவேண்டும். அவரே ***''கர்த்தாதி கர்த்தராகவும், இராஜாதி இராஜாவாகவும்''*** இருக்கிறார் என்பதால் அவருக்கு முன்பாக பணிந்து குனிந்து வணங்க வேண்டும்(வெளி.17:14) அவர் தலையாயிருக்கிறபடியால், நமது ஜீவியத்தைக் கட்டுப்படுத்தி, நாம் எப்படி தொழுகை(ஆராதனை) செய்யவேண்டும் என அதிகாரமளிக்கிறார். பவுல் இயேசுவின் தலைமைத்துவத்தைக் குறித்துப் பேசி, ''எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி,எல்லாவற்றையும்... நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்'' என்றார் (எபேசி. 1:22,23). உயிர்த்தெழுந்த கிறிஸ்து தாமே உறுதியாகச் சொன்னதாவது; ''வானத்திலும்,பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப் பட்டிருக்கிறது'' (மத்.28:18)

சிருஷ்டிகராகிய தேவன், கிறிஸ்து மூலமாய் தம்மை வெளிப்படுத்தி, புதிய ஏற்பாட்டின் வாயிலாக பேசியிருக்கிறார். ''பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும்,வகை வகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய் பிதாக்களுக்கு திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்; இவரை சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார். இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்'' (எபி.1:1,2).

இயேசு நம்மிடத்தில் ''உரத்த சத்தமாகவோ'', '' மெல்லிய சத்தமாகவோ'' ''மனசாட்சி மூலமாகவோ'' பேசுவதில்லை; மாறாக புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர்கள் மூலமாக தாம் வெளிப்படுத்திய வசனங்கள் மூலமாகவே பேசுகிறார். அப்போஸ்தலர்களுக்கு அவர் '' என் நாமத்தினாலே பிதா அனுப்பப் போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப் பூட்டுவார்'' என வாக்குத்தத்தம் செய்தார், (யோவான்.14:26). அவர்களின் பிரசங்கச் செய்திகள் பிழையற்றது என காட்டும்படி, கர்த்தர் அவர்களை சகல சத்தியத்திற்குள்ளும் நடத்துவதற்காகவும் உறுதியளித்தார்(ஒப்பிடுக; யோவான். 15:26;16:13). எனவே புதிய ஏற்பாடுதான் நமது இரட்சகரின் தெய்வீகச் சித்தத்தையும்,வழியையும் வெளிப்படுத்திக் காட்டிய ஒன்று என்பதால், நமக்கு அதிகாரமும் அதுவே என்ற முடிவுக்கு வருகிறோம். அது '' ஒரே விசுவாசம்'' (எபே. 4:5) நமது விசுவாசம், நடத்தை, மற்றும் ஆராதனைக்கு தீர்ப்பை அளிக்கிற ஒரே புத்தகம் புதிய ஏற்பாடு தான்; நாம் பிழைத்தாலும், மரித்தாலும் நமக்கு அதிகாரம் இதுவே; நமது வீட்டையும், வியாபாரத்தையும், தொழிலையும் இதன் மீதே கட்டிக் கொள்ளலாம்.

இயேசு நமது ''புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தர்'' (எபி.12:24). புதிய உடன்படிக்கையின் மூலம் (புதிய ஏற்பாட்டின் மூலம்) அவரே நமது இரட்சகர். பாவம், நம்மை தேவனிடத்திலிருந்து பிரிக்கிறது. (ஏசாயா.59:1,2)புதிய ஏற்பாட்டினூடே கிறிஸ்துவே நமது மத்தியஸ்தர்.

தேவனுடைய வசனம் எந்த நற்கிரியையும் செய்ய மனிதனை தகுதியுள்ளவனாக்குகிறது, ஆதலால் வசனத்திற்கு மேல் எதுவும் தேவையில்லை. பவுல், '' வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும்,எந்த நற்கிரியையுஞ் செய்ய தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர் திருத்ததுலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜன முள்ளவைகளாயிருக்கிறது'' என்று வெளிப்படுத்தினார். (2தீமோ.3:16,17).

புதிய ஏற்பாடு நம்மை பாவத்திலிருந்து விடுதலையாக்கப் போதுமான பெலனுள்ளது. '' ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிறது''. நமது உள்ளத்தில் நாட்டப்பட்ட வசனத்தை சாந்தமாய் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். (யாக்.1:21) அது ''ஜீவனுள்ளதும்'', ''வல்லமை'' உள்ளதுமாயிருக்கிறது. ***''தேவனுடைய வார்த்தை ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுற மும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும், கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும் கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும் இருதயத்தின் நினைவுகளையம், யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது.''*** (எபி.4:12)

புதிய ஏற்பாடு ஒரு '' செத்த எழுத்துக்கள்'' அல்ல, பரிசுத்த ஆவியானவர் ''ஒருவருடைய இருதயத்தில்'' வசனத்தின் மூலம் ஜீவனைக் கொடுக்க ஏதுவாக, நேரடியாக, இறங்க வேண்டுவதில்லை. இதற்கான காரணம்-வசனமே ஜீவனுள்ள தாயிருக்கிறது.'' கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது'' என்று பவுல் கூறியிருப் பதால், நமது இரட்சிப்புக்கு தேவன் பயன்படுத்தும் வல்லமை புதிய ஏற்பாடு மட்டுமே. இந்த சத்தியம் மட்டுமே நம்மை விடுதலையாக்குகிறது.'' சத்தியத்தையும் அறிவீர்கள்; சத்தியம் உங்களை விடுதலையாக்கும்''( யோவான்.8:32).

தேவன் தமது சிருஷ்டியைக் குறித்து அக்கறையுள்ளவராயிருக்கிறபடியால், நமது தேவைகள் எல்லாவற்றையும் அவர் அளிக்கிறார். புதிய ஏற்பாட்டிலேயே விலையேறப்பெற்ற வாக்குத்தத்தம் இது. பேதுரு,***''தம்முடைய மகிமையி னாலும், காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவ பக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்ய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி... மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத் தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப் பட்டிருக்கிறது''.***(2.பேதுரு 1:3,4). ஆவிக்குரிய ஜீவியத்தை நாம் பெற பழைய ஏற்பாட்டையோ, தத்துவப் புத்தகங்களையோ, மனிதக் கோட்பாடுகளையோ நாம் காணவேண்டிய அவசியமில்லை. ஆதலால் நாம் விசுவாசத்திற்காகப் போராடவேண்டும். ''பிரியமானவர்களே, பொதுவான இரட்சிப்பைக் குறித்து எழுதும்படி கருத்துள்ள வனாயிருக்கையில், பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்க ப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராட வேண்டுமென்று உங்களுக்கு எழுதி உணர்த்துவது எனக்கு அவசியமாய்க் கண்டது''(யூதா.3).

புதிய ஏற்பாடு நம்முடைய வழிகாட்டியாக இருக்கிறபடியால், மனிதக் கோட்பாடுகள், விசுவாசச் சட்டங்கள், மனித விதிமுறைகள், சபை ஒழுங்குகள் ஆகிய அனைத்தையும் நாம் மறுக்கிறோம். மேலும் இவைகள் தேவனுடைய வசனத்திற்கு எப்படி முரண்பட்டுள்ளன என்பதற்கு அநேக(எண்ணற்ற) நிகழ்ச்சி களைக் கூறமுடியும். அவைகள் அடிக்கடி சூழ்நிலைக்கேற்ப மாறுபடக்கூடியவை களுமாயிருக்கின்றன. புத்தி கூர்மையான ஒரு கண்ணோட்டம் கூறும் சரியான காரியம்; ''மனிதக் கூற்றுகள் வேதத்திற்கு மேல் பேசினால் அது மிகவும் அதிகமாகத் தன்னகத்தே கொண்டுள்ளது; வேதத்திற்கு குறைவாக அவைகள் பேசினால்; அது மிகவும் குறைவு; வேதத்திற்கு சமமாக அவைகள் பேசினால் வேதமே நமக்குப் போதும்; அந்த மனிதக்கூற்றுகள் நமக்குத் தேவையில்லை''.

எல்லா மனுஷரும் புதிய ஏற்பாட்டிற்குத் திரும்பவும், மார்க்க ரீதியான தலையாய அதிகாரம் பெற்ற கிறிஸ்துவினிடத்தில் திரும்பவும் யதார்த்தமாய் வேண்டுகோள் விடுக்கிறோம். எனவே நாம் விசுவாசிக்கிற, கைக்கொள்கிற எல்லா காரியங்களிலும், ''கர்த்தர் சொல்லுகிறார்'' என்ற அடிப்படையை பின்பற்று வோமாக, மறுரூபமலையில் வானத்திலிருந்து உண்டான சத்தம், ***''இவர் என்னு டைய நேசக்குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்; இவருக்குச்செவி கொடுங்கள்''*** என்று கூறியது. (மத்.17:5)

**E.A. ஆறுமுகம்.**

# உண்மையுள்ள ஊழியக்காரன்

என்னைப் பெலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தின படியால் அவரை ஸ்தோத்திரிக்கிறேன் (1.தீமோ. 1:12) என்று தன்னைக் குறித்து எழுதுகிறார் பவுல். தனது வாழ்நாளெல்லாம் பவுல் எல்லாவற்றிலும் தேவனுக்கு முன்பாக உண்மையாயிருந்தார். அப்போஸ்தலரில் யூதாஸ் ஆரம்பத்திலேயே உண்மையில்லாமல் இருந்தான். தேமா இப்பிரபஞ்சத்தின் மேல் ஆசை வைத்து உண்மையில்லாமல் போனான். ஆனால் பவுல் தனது ஜீவியத்தின் சகல நாட்களிலும் உண்மையைக் காத்துக்கொண்டது மிகச் சிறப்பான ஒரு காரியம். ஆகவேதான் பவுல் தைரியமாக தனது முடிவைக் குறித்து மகிழ்ச்சியோடே இவ்விதம் சொல்லுகிறார். (2.தீமோ.4:7) நல்ல போராட்டத்தை போராடினேன். ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன் என்கிறார்.

ஆகவேதான் வாலிப ஊழியக்காரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார். (2.தீமோ.2:15)*நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்தியவசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு. அதுமாத்திரமல்ல அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்கு போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி* (2.தீமோ.2:2) என்றும் எழுதுகிறார். எவ்வளவு ஊழியம் செய்தோம்? எவ்வளவு போதனை செய்தோம்? எவ்வளவு சாதனை செய்தோம்? என்பதெல்லாம் முக்கியமல்ல. நமது வாழ்வில் ஊழியத்தில் எவ்வளவு உண்மையாயிருந்தோம் என்பதுதான் முக்கியம்.

## போதனையில் உண்மை

பவுலின் உபதேச ஊழியம் குறிப்பிட வேண்டிய ஒரு மாபெரும் செயல் உபதேசத்தில் கற்றுத்தேர்ந்த போதகனாயிருக்க வேண்டும். எஸ்றா பழைய ஏற்பாட்டின் காலத்தில் வாழ்ந்து கற்றுத் தேர்ந்த ஒரு போதகனாயிருந்தார். (எஸ்றா.6:7) எஸ்றா வேதத்தை ஆராயவும் அதன்படி செய்யவும், நீதி நியாயங்களை உபதேசிக்கவும் தன் இருதயத்தை பக்குவப்படுத்தியிருந்தான் (வச.10) இதே கருத்தை ஆவியானவர் பவுலின் மூலமாக தீமோத்தேயுவுக்கு நிருபத்தின் மூலமாக எழுதி நினைவூட்டுகிறார். 2தீமோ 3:14 முதல் 17 வரை. மேலும் திருவசனத்தில் உபதேசிக்கப்படுகிறவன் உபதேசிக்கிறவனுக்கு சகல நன்மைகளிலும் பகிர்ந்து கொடுக்கக் கடவன் (கலா.6:6) போதனையை கேட்கிறவர்களும் போதிக்கிறவர்களிடத்தில் உண்மையாயிருக்க வேண்டும்.

அதுமாத்திரமல்ல தான் போதிக்கப்பட்டதற்கேற்ப உண்மையான வசனத்தை பற்றிக்கொள்ளுகிறவனுமாயிருக்க வேண்டும் என்று கூறுகிறார் தீத்.1:9 வசனத்தில் உபதேசத்தில் உண்மையில்லாத மக்களால் தேவனுடைய நாமம் தூஷிக்கப்படுவது மாத்திரமல்ல பல ஆத்துமாக்கள் இடறிப்போக காரணமாயிருக்கிறார்கள். ஒரு போதகரின் போதனை எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு பவுலே ஒரு நல்ல மாதிரி.

## அழைப்பில் உண்மை

உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாய்ப்பற்றிக் கொள்ளுங்கள் என்று பிலிப்பியருக்கு எழுதுகிறார் பவுல். அழைப்பில் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டுமானால் இச்சையடக்கம் தேவை. கொரிந்தியருக்கு இவ்விதமாய் எழுதுகிறார் பவுல் 1, கொ. 9:27 மற்றவர்களுக்கு பிரசங்கம் பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கி கீழ்ப்படுத்துகிறேன் என்கிறார் பவுல். பாவம் என்னும் கூட்டணியில் மிகப்பெரிய பதவி வகிக்கிறது இச்சை. எதிர்ப்புகள், பேராட்டங்கள் மத்தியில் கலங்காமல் இருந்தால் வெற்றி பெறுவோம். எங்கே எதிர்ப்புகள் நமக்கு வருகிறதோ அங்கேதான் நாம் வல்லமையாய் தேவனால் பயன்படுத்தப் படுவோம். எதிர்ப்புகள் மத்தியில் எழும்புகிற ஊழியங்கள் கற்பாறையின்மேல் எழும்புகிற வீட்டைப்போன்றது. கள்ள சகோதரர்களால் வந்த நாசங்கள் பவுலை கலக்கியது உண்மைதான். அதிலும் கன்னானாகிய அலெக்சந்தர் வெகு தீமை செய்தான் என்று குறிப்பிடுவதிலிருந்து அந்தக்கூட்டம் பவுலை எவ்வளவு பாடுபடுத்தியிருக்கும் என்பதை அறிய முடிகிறது.

நமது அழைப்பைவிட்டு மாற்ற சாத்தான், சபையிலே இப்பேர்பட்ட அலெக்சந்தர்களை எழுப்பி சபையின் ஊழியங்களையும் பரிசுத்தத்தையும் குலைக்க முயல்வதை நாம் பார்க்க முடிகிறது. ஆனால் அந்தவெகு தீமைகள் பவுலின் ஊழியத்தின் தரத்தையே உயர்த்திவிட்டது. பவுலுக்கு பலர் வெகுதீமை செய்தாலும் அவர்களுக்கு பவுல் எதிர்த்து நிற்கவில்லை. யுத்தம் செய்யவில்லை.ஆனால் இப்பொழுது இருக்கின்ற சில ஊழியர்கள் தீமைக்கு தீமை செய்வதும் பதிலுக்கு பதில் செய்வதும் இச்சைக்கு இடங்கொடுத்து சபைகளையும் ஊழியங்களையும் சாத்தானுக்கு ஒப்புக்கொடுத்துவிட்டு கர்த்தருக்கு ஊழியம் செய்யாமல் உலகத்திற்கு ஊழியம் செய்து கொண்டு தேவனுடைய நாமம் தூஷிக்கப்படுகிறதைப் பார்க்கும் பொழுது வெட்கமாகவும் வேதனையாகவும் உள்ளது. கர்த்தரால் அழைக்கப்பட்ட ஆத்துமாக்கள் ஆத்துமாவிலே மரித்துக்கொண்டு இருக்கிறார்கள். கர்த்தர் இதற்கெல்லாம் அவர்களிடத்தில் கணக்கு கேட்கப் போவது உண்மை. ஆகவே நாம் உண்மையுள்ள போதகனாகவும் அழைப்பில் உண்மையுள்ளவனாகவும் நாம் அனேக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக் கொள்ள தேவன் நம்மை கிறிஸ்துவின் மூலமாக ஆசீர்வதிப்பாராக ஆமென்.

**யோசுவா செல்வம்**

அரக்கோணம்

# விளையாட்டுச் செய்திகள்

1. 300 டெஸ்ட் விக்கெட்டுகளை வீழ்த்தினார் இலங்கையைச் சேர்ந்த சுழல்பந்து வீச்சாளர் **முத்தையா முரளிதரன்.**

2. சென்னையில் நடந்த ஓபன் டென்னிஸ் போட்டியின் இரட்டையர் பிரிவில் **பிரையன் பிளாக், வாய்னே பிளோக்** ஜோடி வெற்றி வாகை சூடியது.

3. இந்தியாவின் கிராண்ட் மாஸ்டர் **விஸ்வநாதன் ஆனந்த்** ஃபிடே உலக செஸ் சாம்பியன் பட்டத்தை வென்ற முதல் ஆசியர் என்ற பெருமையை தட்டிச் சென்றார்.

4. டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிகம் சதம் அடித்தவர் பட்டியலில் 5-வது இடத்தைப் பிடித்தார் ஆஸ்திரேலியாவின் அணித்தலைவர் **ஸ்டீவ் வாஹ்**

5. கியூபா நாட்டைச் சேர்ந்த உலகப் புகழ்பெற்ற குத்துச்சண்டை வீரர் **ஃபெலிக்ஸ் சேவன்** சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றார்.

6. பாகிஸ்தனுக்கு இந்திய கிரிக்கெட் அணியை அனுப்பும் உத்தேசம் இல்லை என்பதில் மத்திய அரசு உறுதியாக இருக்கிறது.

7. உலகப் புகழ்பெற்ற குத்துச்சண்டை வீரர் **முகமது அலிக்கு** அமெரிக்க அதிபரின் குடிமக்கள் விருது வழங்கப்பட்டது.

8.டெல்லியில் நடந்த டென்னிஸ் போட்டியில் கொரியா ஆசியக் கோப்பையை வென்றது.

9. தென் ஆப்பிரிக்காவின் வேகப்பந்து வீச்சாளர் **ஃ பொலாக்** 200 வது டெஸ்ட் விக்கெட்டை இலங்கைக்கு எதிராக வீழ்த்தி சாதனை புரிந்தார்.

10. ''டைம்ஸ்'' இதழின் 2000மாவது ஆண்டின் சிறந்த தெற்காசியராக இந்தியாவின் பளுதூக்கும் வீராங்கனை **மல்லேஸ்வரி** தேர்ந்தெடுக்கப்பட்டார்.

11.இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் **கவாஸ்கர்,** தேசிய கிரிக்கெட் அகாடெமி உறுப்பினர் மற்றும் ஆலோசகர் பொறுப்பிலிருந்து விலகினார்.

# நடப்புச் செய்திகள்

- தொலைபேசி எஸ்.டி.டி. கட்டணம் குறைப்பு,200 கி.மீ வரை இனி உள்ளூர் அழைப்பு
- பொது இடங்களில் புகைப்பிடிக்க தடைவிதிக்க வேண்டும் என்று மாநிலங்களவை உறுப்பினர்கள் யோசனை தெரிவித்திருக்கிறார்கள்.
- ஆயுதங்களைப் போட்டுவிட்டு வந்தால், காஷ்மீர் தீவிரவாத குழுவுடன் பேச வாய்ப்புள்ளது என்று உள்துறை அமைச்சர் கூறியிருக்கிறார்.
- 2004க்குள் 4 நவீன செயற்கைகோள்களை விண்ணில் செலுத்த இந்திய உத்தேசித்துள்ளது.
- செங்கோட்டையில் தீவிரவாதிகள் புகுந்த சம்பவம்; ராணுவ விசாரணைக்கு மத்திய அரசு உத்தரவு.
- திரு. ஜி.கே. மூப்பனர் மீண்டும் த.மா.கா. தலைவராகதேர்ந்தெடுக்கப் பட்டார்.
- சிறுபான்மையினர் மீது இனி தாக்குதல் இராது என்று கிறிஸ்தவ தலைவர்களிடம் பிரதமர் வாஸ்பேயி உறுதி தெரிவித்துள்ளார்.
- தமிழகத்தின் 30-வது மாவட்டமாக ஜனவரி 1-ம்தேதி அரியலூர் மாவட்டம் உதயமானது.
- இந்தியாவில் ஐ.எஸ்,ஐ. நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதாக கூறுகிறார் பாதுகாப்பு அமைச்சர்.
- திருமணக் கூடங்களில் பிளாஸ்டிக் டம்ளர்களை உபயோகிக்க தடைகொண்டு வர யோசனை.
- 2020-ல் இந்தியாவில் வறுமை ஒழியும் என்று இந்திய அறிவியல் காங்கிரஸ் கூறுகிறது.
- தமிழக காங்கிரஸ் தலைவராக E.V.K.S. இளங்கோவன் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.



# HEAR THE VOICE OF TRUTH
## ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45 -9.00<br>9.00 - 9.15 | Box.3815<br>New Delhi -110049 | SUNNY DAVID |
| ENGLISH | Friday | 7.45 - 8.00 | Box.3815<br>New Delhi -110049 | J.C. CHOATE |
| TELUGU | Sun,Mon<br>Tue, Thu | 2.00 -2.15 . | Box . 80<br>Kakinada -533 001 | JOSHUA<br>GOOTAM |
| TAMIL | Sunday<br>Tuesday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00<br>5.30 - 5.45<br>5.45 - 6.00<br>5.30 - 5.45 | Box . 8405<br>Bangalore - 560 084 | P.R.SWAMY |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum -695 034 | P.K.VARGHESE |
| KANNADA | Sunday | 1.45 - 2.00 | Box.448<br>Bangalore - 560 004 | ROBERT<br>RATHNAKAR |

***Please write to these address for Bible Correspondence Course***

***Magazines and other Christian Literatures***

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

REGISTERED NEWS PAPER RNI No. 47661 / 87 - NEW DELH

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

*பரிசுத்த வேதாகமத்தை முறையாகக்*

*கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு*

## *ஓர் இனிய செய்தி.*

**ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.**

**இது 15 பாடங்களைக் கொண்ட**

## ஓர் இலவசப் பயிற்சி.

**இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.**

**பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

*இயக்குநர்,*

*அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,*

த.பெ.எண் - 27, காங்கேயம் - 638 701. தமிழ்நாடு, இந்தியா.

Published by **Church of Christ, Kangayam.**

Printed at Konar Printers, Madurai - 625 012. Editor : **S.RAJANAYAGAM,**